

சுப்ரீம்சட் - 1

கார்த்திகை மாதம் 24ம் திகதி
December 09, 2012
# மலைமுரசு®
அறைவு 01 இயம் 20
MALAIMURASU
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
விலை - 20.00 பக்கங்கள் - 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக அணிதிரண்ட மூதூர் பெண்கள்

2012.12.06 பதாகைகள் தாங்கியபடியான அமைதியான பேரணி மூதூர் பிரதானவீதி வழியாக மூதூர் பிரதேச செயலகத்தை அடைந்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளனர். முன்னம்போடிவெட்டை கிராமத்திலிருந்து சிறிய வாகனங்களின்மூலம் மூதூர் 3CD சந்தியை வந்தடைந்த சீருடை அணிந்த பெண்கள் அணி அதிலிருந்து பிரதேச செயலகம் வரை அமைதியானமுறையில் நடைபவனியாக பதாகைகள் தாங்கிய வண்ணம் அணிவகுத்து பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர். சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர், மகளிர் விவகார (7ம் பக்கம் பார்க்க)



## குச்சவெளியில் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார் முதலமைச்சர்

தேசத்திற்கு மகுடம் 2013 தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் நடமாடும் சேவை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 01.12.2012 அன்று குச்சவெளி தி/விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வை கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் அவர்கள் ஆரம்பித்து வைத்தார் மக்களிற்கு சிறந்த பலனை பெற்றுக் கொடுத்த ஓர் நடமாடும் சேவையாக இது விளங்கியது. மத்தியவங்கி, விவசாயத் திணைக்களம், தொழில்த் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், புவிச்சரித்திரவியல் திணைக்களம், காணித் திணைக்களம், என சுமார் 19 திணைக்களங்கள் இந் நடமாடும் சேவையில் பங்குபற்றி இருந்தன. இதன்போது நூற்றுக் (7ம் பக்கம் பார்க்க)



முதலமைச்சரால் பிறப்புச்சான்றிதழின் பிரதி வழங்கப்படுகின்றது

# விண்ணில் பாய்ந்த வானோடி பறப்பின் பின்னணியான தமிழன்

(2ம் பக்கம் பார்க்க)


ஆர். எம். மணிவண்ணன்

## காலமானார் முன்னாள் திருமலை ஆயர்


ஆயர் அதிமேதகு அருட் கலாநிதி லியோ இராஜேந்திரம் அன்டனி

(7ம் பக்கம் பார்க்க)

## சொந்த வயற் காணிகளில் பயிர் செய்ய அனுமதியுங்கள்


நந்தன் மாஸ்டர்

மூதூர் பிரதேசச் செயலகப் பிரிவிற்குள் அடங்கும் கங்குவேலிக் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள படுகாடு, முதலைமடுக் கிராம தமிழ் விவசாயிகள் தமது சொந்த பயிர்ச்செய்கை நிலத்தில் பயிரிடமுடியாத நிலை காணப் படுவதாக திருக்கோணமலை திரு. சி. நந்தகுமார் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார். நெற்காணிகளின் உரிமப் பத்திரங்களைக் தமிழ் விவசாயிகள் கொண்டிருந்தாலும் கூட தற்போதும் அந்நிலங்களில் சகோதர இனத்தவரே பயிர் செய்ய முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார். தற்காலப்பகுதியில் பெரும்போகச் செய்கைக்காக தமது வயல் நிலங்களுக்குப் போன விவசாயிகள் அங்கு பயிரிட ஏதுவான (7ம் பக்கம் பார்க்க)

## குழந்தை பெற்றால் கொட்டும் காசு

(7ம் பக்கம் பார்க்க)

## கற்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்தார் ஆசிரியர்

(7ம் பக்கம் பார்க்க)

## ஆலங்கேணி கொலை விபரங்கள் அம்பலமாகின

(7ம் பக்கம் பார்க்க)

## ஞாயிறு தரிசனம் அலைவரிசையில

மாலை 6 மணி - இரவு 8.30 மணி
சன் கேபிளில் 16வது அலைவரிசை
SCV அலைவரிசையில் சட்லைட்
கேபிள் விசனில்

**வணக்கம் தரிசனத்தில்:**
வைத்திய கலாநிதி, வருகைதரு விற்பன்னர், திரு கனேகபாகுவுடன் நேர்காணல்

**திருமலைக் கலைஞர்கள் கலக்கும் நகைச்சுவைத் தொடர் நாடகம் - வாத்தியும் வைத்தியும்**
**குட்வில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வு**
**வானம்பாடிகளின் தேன்மாரி இசை நிகழ்ச்சி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆவது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

### வானம் தொட்டு விடும் தூரம் தான்

இலங்கைக் கொடியுடன் செயற்கைக் கோளொன்றைச் சுமந்தபடி முதலாவது விண்ணோடம் வானில் பாய்ந்து விட்டது. அப் பற்பபைக் காணொளியில் பார்க்கும் போது ஏற்பட்ட மெல்லிய மென்சிலிர்ப்பைப் பெரிதாக்கியது அத் திட்டத்தின் பின்னுள்ள ஒரு தமிழ் மனிதனின் அதீத உழைப்பு.

ஈழத் தமிழரின் செயற்கைக் கோளின் தந்தையென நாம் போற்ற வேண்டியது திரு. ஆர்.எம். மணிவண்ணனையே. அவரது விடாமுயற்சியின் பயனைத்தான் நாம், இலங்கையர் அனைவரும் உணர்வுபூர்வமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

அவருடனான பேட்டிகளின் போது அவர் சொல்வதெல்லாம் பணம் அல்லது முதலீடென்பது என்றுமே ஒரு பொருட்டல்ல என்பதே. அவ்வாறாயின் வெல்வதற்கான பொருட்டு எது? என்று கேட்கத் தோன்றுகின்றது அல்லவா?

வெல்வதற்கான பொருட்டு வெல்லும் எண்ணமும் அதற்கான முயற்சியும் தான். என்றோ நான் வாசித்து மனதில் பதிந்துகொண்ட வரிகள் தற்போது நினைவுக்கு வருகின்றன.

எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லனவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவும் வேண்டும்

இவ்வரிகளின் எச் சந்தர்ப்பத்திலும் - நிறையவே நிதியும் வேண்டும் - என்னும் வாசகங்கள் கோர்க்கப்படவில்லையே.

இவ்வரிகளைத்தான் விண்ணில் பறந்த வானோடத்தின் பின்ணணியிலுள்ள மனிதனும், சவால் மிக்க மலைமுரசு என்னும் பத்திரிகையின் பின்னாலுள்ள மனிதனும் சிந்திப்பது.

சிந்திப்பதும் செலாற்றுவதும் ஒருமுகப்பட ஏனைய வளங்கள் யாவும் ஒன்றாகத் சேர்ந்துவரும் இயற்கையின் கைங்கரியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எதை நினைக்கின்றோமோ அதையேதான் அடைகின்றோம் என்றொரு மொழியுண்டு. அதனடிப்படையில் உறுதியான சிந்தனையும் அதன்படியான செயற்பாடுகளுமே வெற்றிகளைப் பெற்றுத்தருகின்றன என்பதை இன்னும் எத்தனை எத்தனையோ மனிதர்களிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

இயலாமை என்பது மனமும் எண்ணமும் சார்ந்ததேயொழிய பணமும் பரிச்சயங்களும் சார்ந்ததல்ல என இக்கணத்தில் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். என்னால் முடியும் என செய்து காட்டி வெற்றியடைந்த எத்தனையோ மன மற்றும் உடற்குறைபாடுள்ள மனிதர்களைக்கூட நாம் தாண்டி வந்துள்ளோம். அவ்வகையான மனிதர்களுள் ஒருவராக இரஸ்ய நாட்டின் போர் விமான ஓட்டியான அலெக்ஸ்சேய் மரஸ்யேவ் அவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்வதை என் கடமைகளில் ஒன்றாக எண்ணுகின்றேன். தனது இரண்டு கால்களையும் முதலாவது உலக மகா யுத்தத்தில் இழந்த அந்த மனிதன் தனது விடா முயற்சியாலும் தளராத மனத் துணிவாலும் கடுமையான பயிற்சியாலும் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் இரஸ்யாவின் அதிநவீனத் தயாரிப்பான போர் விமானத்தைச் செலுத்தி 36ற்கும் மேற்பட்ட யேர்மனிய விமானங்களைச் சுட்டுவீழ்த்தி ஒரு - உண்மை மனிதன்- ஆக உலக வரலாற்றில் தன்னைப் பதிந்ததுடன் உலகில் இரு கால்களுமின்றிப் பொய்க்காலுடன் போர் விமானம் ஓட்டிய முதல் மனிதனான அலெக்ஸ்யேயுக்கு - எதுவும் என்னால் முடியும் - என்ற மனோதிடமிருக்குமாயின், நண்பர்களே, அனைத்தையும் கொண்டுள்ள எம்மால் செய்ய முடியாததொன்று உண்டா?

அவ்வாறு உண்டெனில் அதையும் ஒரு மனிதன் செய்து முடிப்பான். அப்போது வெளிப்படையாக நாம் கூனிக்குறுகாதிருப்பினும் ஆழ்மனத் தேடலில் நாம் அவமானப்படுவதை நாமே உணர்வோம் அல்லவா?

நிகழ்த்துவதற்கான காலம் இப்போது கனிந்து கிடக்கின்றது நண்பர்களே! மனவாயுதத்தைத் தீட்டிக்கொள்வோமா?

-ஆசிரியர்-

## கொய்யா மரம் யமனானது

கிண்ணியா மாணவன் மரணம்

கொய்யாப்பழ ஆசையில் மரத்திலேறிய போது அம்மரத்திலிருந்து தவறி விழுந்து ஐந்தாம் வகுப்பு மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். வியாழக்கிழமை காலை ஆறு மணியளிவில் நிகழ்ந்த இத் துயரச் சம்பவத்தில் முஹமட் அஸ் மீர் எனும் கிண்ணியா அல்-அதான் வித்தியாலய ஐந்தாம் வகுப்பு மாணவனே மரணமாயுள்ளார்.

இவரது குடும்பம் அண்ணல் நகர் பகுதியில் வசித்துவருகின்றது

## தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை 02.12.2012 காலை திருகோணமலையில் நடைபெற்றது. சுங்க வீதியில் உள்ள அலுவலகத்தில் இப்பொதுச் சபைக்கூட்டம் இடம்பெற்றது. இதில் 28 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமாக செல்வம் அடைக்கலநான் தலைமையில் நடைபெற்ற இப்பொதுச்சபைக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் இதில் பங்கு கொண்டனர்.

காலை 11.00 மணிக்கு ஆரம்பித்த இக்கூட்டம் மாலை 5.30 மணிவரை நடைபெற்றது.

அடுத்த வருடம் தை மாதம் 26. 27 அம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டதுடன் தற்போதய அரசியல் நிலமைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

## "காற்றிழுத்ததால் கடலுக்குள் நுழைந்தோம்" - கதைவிடும் இந்திய மீனவர்கள்

### - களவுக்குதவுமா கடற்காற்று -

புல்மோட்டைக் கடலுக்குள் நுழைந்து மீனள்ளிய ஐந்து றோலர் படகுகளைக் கடற்படை கடந்த வாரத்தில் கைது செய்திருந்தது. இந்த றோலர்களிற் பறந்த கொடியிலும் பொறிக்கப்பட்டிருந்த பெயரிலும் சந்தேகங் கொண்ட கடற்படையினர் புல்மோட்டைக் கடற்பரப்பில் காணப்பட்ட அவற்றைத் தடுத்து நிறுத்தியபோதே அதிலிருந்த மீனவர்கள் இந்தியர்கள் எனத் தெரிய வந்துள்ளது.


முப்பத்தியேழு இந்திய மீனவர்கள் இவ் ஐந்து றோலர்களிலும் இலங்கைப் பரப்பில் மீன்பிடித்திருந்தது தெரியவரவே அவர்களைக் கைது செய்து துறைமுகக் காவல்துறையிடம் ஒப்படைந்திருந்தனர்.

இவர்களை கடந்த திங்கட் கிழமை காலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே அவர்கள் தமது செயலுக்குக் காற்றைக் காரணம் காட்டியிருந்தனர்.

நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் விளக்கமறியலுக் குட்படுத்தப்பட்டுள்ள இவர்கள் அள்ளிய மீன்களை விற்று ரொக்கத்தை நீதிமன்றக்கணக்கிற்கு வைப்பிலிடுமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள்களை முத்தமிட்டது கார்

கடல்முகவீதியில் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு முன்பாவுள்ள தேநீர்க்கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை மகிழுந்து ஒன்று முத்தமிட்டதால் பெரும் களோபரம் நிகழ்ந்தது. பதட்டமடைந்த மகிழுந்துச் சாரதி தனது வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததால் தடம் மாறிய வாகனம் அருகிலிருந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டினை மோதியுள்ளதைப் படங்களில் காண்க.




## விண்ணில் பாய்ந்த வானோடத்தின் பின்னணியிலுள்ள தமிழன்

நவம்பர் 28, 2012ல் விண்ணில் பாய்ந்த சுப்ரீம் சட் 1 என்ற விண்னோடம் இலங்கைத் தமிழர் ஒருவரின் கம்பனியான சுப்ரீம் சட் கம்பனியின் 320 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் நிகழ்ந்துள்ளது.

SupremeSAT

சுப்ரீம் சட் கம்பனியுடன் சீனாவின்கிறேட் வோல் இண்டஸ்ரி கோப்பரேசன் என்னம் கம்பனியும் இணைந்தே இவ் விண்னோடத்தை வானில் செலுத்தியுள்ளன. பூகோளச் சுற்றுப் பாதையில் 87.5 என்ற நெட்டாங்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இவ் விண்ணோடத்திட்டத்தின் முதலீட்டாளர்களில் ஒருவரான சுப்ரீம் சட் கம்பனியின் முதல்வர் ஆர்.எம்.மணிவண்ணன் என்னும் இலங்கைத் தமிழரே. அவருடனான நேர் காணலின் போது அவர் பல விடயங்களை வெளிப் படுத்தியிருந்தார். இம் 320



மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் ஐந்து வருடத் திட்டங்கள் எம்மிடையே அதாவது சுப்ரீம் சட் கம்பனிக்கும் சீன கிறேட் வோல் இண்டஸ்ரி கோப்பரேசனுக்கும் இடையே உள்ளன. அதன் முதற்கட்டமாகவே சும்ரீம்சட்-1 என்னும் செயற்கைக் கோள் வானில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதற்கான செலவு100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

எமது இத்திட்டத்திற்கான முதலீடுகளை வெளிநாட்டு நிதி நிறுவனங்களே மேற்கொண்டுள்ளன. இலங்கை அரசின் எவ்விதமான முதலீடுகளும் இத் திட்டத்தில் இல்லை. இச் செயற்கைக் கோளானது தெலைத்தொடர்பாடலை முன்னிறுத்தியே உள்ளது. அதனடிப்படையில் செயற்கைக் கோள்த்தொடர்பாடல், தகவல் கடத்தல், எண்ணியல் அகன்றபட்டை பல்லூடக முறைமைகள் மற்றும் ஊடகச் சேவைகளை கிழக்கு, தென்கிழக்காசிய நாடுகள், சீனா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகள், சீனக் கடற் பிராந்தியம் மற்றும் இந்தியத் துணைக்கண்ட நாடுகளுக் கிடையே நடாத்தும் நோக்குடையது என அவர் மேலும் தெரிவித்தார்.

திட்டமிட்டவாறு எஞ்சியுள்ள மில்லியன் டொலர்களில் மேலும் இரு செயற்கைக்கோள்களை 2015ம் ஆண்டுக்குள் விண்ணுக்குச் செலுத்தும் நோக்கத்தை இவ்விரு அமைப்புக்களும் கொண்டுள்ளன எனத் தெரிவித்த அவர் அத்துடன் இலங்கையின் ப்ல்லேகலயில் விண்ணோடக் கல்விச்சாலையையும், விண்ணோடச் செலுத்தல் நிலையமொன்றையும் நிறுவுவதுடன் இறுதிச் செயற்கைக் கோளை 2015ம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஏவும் எண்ணத்தைத் தாம் கொண்டிருப்பதாகவும், அனைத்துச் செயற்கைக் கோள்களும் முழுவதுமான வர்த்தக தேவைகளைக் கொண்டவையேயொழிய எவ்விதமான அரசியல், பாதுகாப்பு மற்றும் ஏனைய இருட்டடிக்கப்பட்ட விடயங்களைக் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இத்திட்டங்களுக்கா அவர் முதலில் இந்திய அரசையே நாடியிருந்ததாகவும் அங்கிருந்து நம்பத்தகு முடிவுகள் வெளி வராததால் சீன விண்ணோடக் கழகத்தை நாடியதாகவும் தெரிவித்த அவர் சீனா உந்துசெலுத்தியை வடிவமைத்தாகவும் செயற்கைக்கோளை பிரான்ஸ் வடிவமைத்துத் தந்ததாகவும் தெரிவித்தார். தனக்கென ஒரு செயற்கைக் கோளை வடிவமைத்த கிழக்காசி நாடுகளுக் இந்திய, பாகிஸ்தானை விடுத்து அடுத்த நாடாக இலங்கையை முன்ணிறுத்தியது பெருமையான விடயம் எனத் தெரிவித்த அவர் ஏனைய கிழக்காசிய நாடுகளான மோல்டிவிஸ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளது செயற்கைக்கோள்களைச் செலுத்த தமது கம்பனி கலந்துரையாடல்களை மேற்கொண்டு ள்ளது எனவும் தெரிவித்தார்.

பொருள்வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த நடுத்தர வர்த்தகரான தனது தகப்பனாரின் மறைவின் பின் அதே தொழிலைத் தொடர்ந்த மணிவண்ணன் 39 வயதுடையவர் என்பதுடன் 1990ன் பின் கிழக்காசிய நாடுகளுக்கு தனது வர்த்தகத்தைப் பெருக்கிக்கொண்டு நிலக்கரி மற்றும் பெற்றோலியப் பொருட்களை வாங்கி விற்கும் துறைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். போர்க்காலச் சூழலில் தனது வர்த்தக செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டிருந்த போதும் அவை தொடர்பான விடயங்களை தம்பட்டமில்லாமல் செயற்படுத்தி வந்ததாகவும் போரின் முடிவின் பின் தனது வர்த்தகத் திட்டங்களைப் பன்முகத் படுத்தத் தொடங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். சனாதிபதியின் புதல்வரின் முதலீட்டையும் கொண்டுள்ள இவ் விண்ணோடத் திட்டம் அவருடைய கடும் முயற்சியாலேயே வெற்றியடைந்ததாகவும் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "படர்க்கை"

## கலை இலக்கிய சஞ்சிகை

2013ம் ஆண்டின் முதற்காலாண்டில் திருக்கொணமலையிலிருந்து வெளியிடப்படவுள்ள கலை இலக்கியக் காலாண்டு சஞ்சிகைக்கு அனைத்து வகைப்பட்ட தரமான ஆக்கங்களும் எதிர்கார்க்கப்படுவதாக அச் சஞ்சிகையின் சிரேஸ்ட ஆசிரியரான திரு. நந்தினி சேவியர் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ஆக்கங்களை அனுப்பிவைக்க முடியும் என்பதுடன் வெளிநாட்டு எழுத்தாளர்களும் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். ஆக்கங்களை மின்னஞ்சலிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும் அவர் ஆக்ககர்த்தாக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆக்கங்களை அனுப்புவதற்கு ஆசிரியர்,படர்க்கை, இல 159 A, கடல் முகவீதி, திருக்கோணமலை எனும் தபால் முகவரிக்கோ அல்லது tpad03@gmail.com எனும் இலத்திரனியல் அஞ்சலையோ பயன்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

SS DIGITAL'S
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில், விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சிடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங்,கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224933, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.

## சமாதானக் கலாசார விழாவிலும் நித்திலம் சஞ்சிகை வெளியீட்டிலும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்







சாதாரனதரப் பரீட்சைகளின் பின் உலகம்
நோக்கிப் பயணிக்க உங்களுக்குத் தேவையான
ஆங்கில கல்வி நெறி

UNIVERSITY OF CAMBRIDGE Key English Test (KET)

தொடர்புகளுக்கு
Veal Business College
No:159 A,Sea Viwe Road Trincomalee. Tel: 026 2227 622 , 077 7555 738

## இலக்கியத்தில் காதல்

இலக்கியச் சிலம்பைக் கற்றேன்
என்னுளம் கலங்க லானேன் !
கலக்கிய சம்ப வத்தைக்
கவிதையாய் சொல் கின்றேன்!
கலக்கவே செய்யும் யார்க்கும்
கல்மனம் இருந்தாற் கூட.
துலக்கிடும் உண்மை தன்னை
தூண்டிடும் உணர்ச்சி வந்தே!

கோவலன் சிலம்பை விற்கக்
கொண்டுமே சென்ற போதில்,
கேவலம் ஒருவன் சொல்லக்
கேட்டுமே கொல்லச் செய்தான்
காவலன் செழியன் என்பான்!
கண்ணகி வருவா னென்றே
ஆவலாய்க் காத்தி ருந்தாள்
அறிந்ததும் கலங்கி வீழ்ந்தாள் !

கொதித்துமே எழுந்தாள் ; சென்றாள்
கோவலன் உடலைக் கண்டாள்
கதிதனை எண்ணி யெண்ணிக்
கலங்கினாள் ! சிலம்பி னோடும்,
விதித்தவன் சபையை நோக்கி
விரைந்ததுமே பறந்தாள்! கண்டு
மதித்திட வில்லை ! தேரா
மன்னனே என்ற ழைத்தாள்!

ஏன் ....

ஏன்கொலை செய்தாய் ? என்றாள் !
என்சிலம் பெடுத்தா னென்றாள் !
நான் சிலம்புடைப்பேன் என்றாள்
நல்ல'மா ணிக்கம்' கண்டான் !
"நான்கொலை ஞன்" தான் என்றான்
நடுங்கினான் நிலத்தில் வீழ்ந்தான்
மான்நிகர்த் தாளும் வீழ்ந்தாள்
மாண்டுமே இருவர் போனார் !

கண்ணவன் கணவன் தன்னைக்
காத்திட மறந்த நாட்டைக்
கண்ணகி அழித்தாள் தீயாம்
கற்பினால் ; இங்கிந் நாளும்,
கண்ணகிப் பெண்கள் தோன்றி
காத்திட வேண்டும் நீதி !
பெண்மையால் நமது மண்ணும்
பெரும் புகழ் அடைந்து வாழ்க!

– அ.கௌரிதாசன்

## பெரும் கற்கால திருகோணமலை.

கா .செந்தூரன்

இதுவரை திருகோணமலையின் வரலாறு ஆய்வாளர்களால் ஆராயப்பட்டு பல நூல்களாக வந்து விட்டன.ஆனால் அவற்றில் வரலாற்றுக் காலம் தான் முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நாகரிக வளர்ச்சியை.வரலாற்றுக்கு முந்திய காலம்,வரலாறு உருவாக்கக் காலம், வரலாற்றுக்காலம் என்று மூன்று வகையாக பிரிக்கலாம்.

ஈழத்து நாகரிக வளர்ச்சியில் இந்த மூன்று காலங்களிலும் திருகோணமலையின் பங்கு முக்கியமானது என்பது இதுவரை கிடைத்த ஆதாரங்களில் இருந்தது புலப்படுகிறது.

இதில் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் திருமலையின் பங்கு என்ன

மக்கள் எழுத்து பாவனையை தொடங்காத காலம் வரலாற்றுக்கு முந்திய காலம் எனப்படுகிறது. எல்லா இனக்குழுக்களின் வரலாறுகளை ஆராயும் போதும் இந்த காலப்பகுதி மிகவும் சவாலுக்கு உரியதாக காணப்படுகிறது. இக்காலப்பகுதில் மக்கள் இருப்பு தொடர்பாக ஆதாரங்களை தேடும் போது பின் வந்த பெரும்கற்காலம் தொடர்பான குறிப்புகளும்,அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ,உபகரணங்களின் எச்சங்களும் மட்டுமே ஆதாரங்களாக கொள்ள முடியும்.

பெரும்கற்கால (கி.மு600 முன்னர்) திருகோணமலை பாரிய சனத்தொகையோ ,கட்டமைக்கபட்ட ஆட்சி முறையையோ கொண்டிருந்திருக்காத, சில மனித குழுக்கள் தங்களது அடிப்படை தேவைகளை நிறைவு செய்து கொண்டு வாழ்திருக்கிறார்கள்.




கதிரவெளி (தற்போது மட்டக்களப்பு மாவட்டம்),திரியாய், தென்ன மரவாடி,கிழக்கு மூதூரில் அமைத்துள்ள "ராஜவந்தான்ஜி மலை தொடக்கம் "படைகுமித்த கல்ஜிவரை உள்ள குன்றுகள் ஆகிய வற்றில் காணப்படும் ஆதாரங்கள் அம்மக்கள் இருப்பை உறுதி செய்கின்றன.


தற்போது திருகோணமலை மாவட்டமாக அடையாளப்படுத்த பட்ட பகுதி மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் கிடைக்கும் கருப்பு சிவப்பு நிற பெரும்கற்கால மட்பாண்டங்கள் ,தாழிகள் மக்களின் இருப்புக்கள் இருந்தது என்பதை உறுதி செய்கின்றன.

கண்[illegible] ஆதாரங்கள் இ[illegible] பகுதியில் செல்வாக்கை கொண்டிருந்த இம்மக்களை ஆரிய இலக்கியமான ராமாயணம் உயர் தொழில் நுட்பம் கொண்டவர்களாகவும் , கட்டுக்கோப்பான ஆட்சி முறையை கொண்டவர்களாகவும் இனம் காட்டுகிறது. அதாவது இந்த மனிதர்களின் தலைவனிடம் (ராவணனிடம்) விமானம் இருந்ததாக கூட அப்புராணம் கூறுகிறது.

இன்னுமொரு ஆரிய புராணமான மாகவம்சம் இம்மனிதர்களை யட்சினிகள் என்ற பெயர் கொண்டு அழைக்கிறது.அதுமட்டும் அல்லாது எதோ ஒரு சக்தியை கொண்ட ஒரு கூட்டமாக அடையாளப் படுத்துகிறது. அதற்க்கு பின், வந்த வரலாற்று ஆசிரியர்கள் அவர்களை இயக்கர், நாகர் என்ற இனமாக அடையாளப்படுத்தினர்.

கி.மு 500 ஆண்டுக்கு பிறகுதான் ஆரியர்கள் இங்கு வந்தார்கள் என்றால்

அதற்க்கு முன் இங்கு வாழ்ந்த மக்கள் யார் வரலாற்று ஆசிரியர்கள் இவர்களை அடையாளபடுத்துவதே இயக்கர் நாகர் என்ற தமிழ் பெயர்களை [illegible] அதை விட இங்கு [illegible] அடிப்படை தொழில்



கதிரவெளியில் கண்டெடுக்கப்பட்ட தாளி

நுட்பங்களை கொண்ட மட்பாண்டங்கள் மற்றும் பிற உபகரணங்கள் வடிவமைப்பும் காலபகுதியும் தமிழ் நாட்டில் கிடைத்த பொருட்களுடன் ஒத்து போகின்றன. அப்படியானால் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் பெரும்கற்காலத்தில் இங்கு வாழ்த்து எந்த இனம் என்று

917ஆண்டு கந்தரோடையில் ஆய்வு செய்த சேர் போல் பிரிஸ் அவர்கள் 1919 ஆண்டு டெயிலி நியூஸ் என்ற ஆங்கில பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"இதுவரை கனவிலும் எண்ணிப் பாராத நமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்ச்சிக்கட்டம் பற்றிய சான்றுகள் உண்மையாகவே மண்ணுக்குள் புதைந்து இருப்பதை தமிழ் மக்கள் ஒருகாலத்தில் உணர்வார்கள் என்று நம்புகிறேன்...

இன்னும் நடுவோம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச வரலாற்றை தொடக்கி வைத்திருக்கும் திருக்கோணமலை கலை இலக்கிய வரலாறு

தில்லைநாதன் பவித்ரன்

வரலாறு என்பது மனித சமூகவிருத்தியினுடைய குறிகாட்டியாகும். வரலாற்றை அறியும் போது மனித குலம் கடந்த கால, நிகழ்கால, அனுபவங்களுடன் எதிர்காலத்தை செதுக்கிக்கொள்ள முடிகிறது. எனவே வரலாற்றை அறிதல், அறியச் செய்தல் என்பன காலவெளியில் முனைப்பான அம்சங்களாகி விடுகின்றது. இதனால் தான் வரலாறு என்பது "ஒரு யுகத்தில் எழுதி பாதுகாத்து வைக்கும் அளவிற்கு பெறுமதிமிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகம் ஒன்றில் இருந்து தேடிக் கண்டுபிடித்துக் கொள்வதாகும்" என "பேர்க்ஹாட்" எனும் வரலாற்றியலாளர் குறிப்பிடுகின்றார்.

வரலாற்று மூலதாரங்களின்றி வரலாற்றறிதல் கடினமான காரியம் எனவே தான் கல்வெட்டியல், நாணயவியல், சுவட்டியல் போன்ற தொல்லியல் ஆதாரங்கள் வகைப்பட்டன. இருந்தும் மேற்குறித்தவை அனைத்தும் நூதனங்கள் ஆக்கப்பட்ட இன்றைய நவீன காலத்தில் இலக்கிய ஆதாரம் மட்டும், ஒரு மொழியின், இனத்தின் சமூக வரலாற்றை தளமாக கொண்டு இயங்கி வருகின்றமை மறுதலிக்க முடியாத உண்மை இந் நிதர்சனத்தின் அடிப்படையில் தான் திருக்கோணமலை கலை இலக்கிய வரலாறு எனும் நூல் திருமலை நவம் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.

காத்திரம் மிக்க ஈழத்தின் தமிழ் இலக்கிய பரப்பிலே தெரிந்தோ தெரியாமலோ புறக்கணிக்கப்பட்டு தெரிகின்ற திருக்கோணமலை பிரதேசத்தினுடைய இலக்கிய வரலாற்றை 17ம் நூற்றாண்டில் இருந்து தற்காலம் வரை ஊடாடும் இந்நூல் கவிதை, சிறு கதை, நாவல், நாடகம், இசை மரபு, மெல்லிசை, சிற்றிதழ்கள், சிறுவர் பாடல்கள் மற்றும் சிறுவர் நாவல்கள் என இலக்கிய விருட்சத்தின் பல்வேறுபட்ட கிளைகளை தாங்கிய வண்ணம் வெளிவந்துள்ளது.

பாடசாலை அதிபராக அயராது பாடுபட்டு உழைத்த நவம் அவர்களின் 40 வருட கால தேடலின் விளைவும், தரவு சேகரிப்பின் தன்மையும் இந்நூலில் படமாய் விரிகின்றது. 17ம் நூற்றாண்டிலிருந்து தனது ஆய்வை தொடங்கும் நவம் அவர்கள் திருக்கோணமலையில் இலக்கிய பாரம்பரியம் வேர் விடத் தொடங்கியமையும் அது திருக்கோணேஸ்வரத்தை மையப்படுத்தி முதிர்ந்தமையும் அந்நூற்றாண்டு புலவர்களான கவிராசர், பண்டிதராசரை மேற்கோள்கொண்டு காட்டியிருப்பதை காணலாம்.

இலக்கிய கால கட்டத்தை 17ம் நூற்றாண்டு, 18ம் நூற்றாண்டு, 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டு என வகைப்படுத்தி அவற்றுள் பத்தாண்டு காலங்களாக இலக்கியங்களை வகைப்படுத்தியிருக்கும் தன்மை இந்நூலின் போசனைக்கு வலுச் சேர்ப்பதாய் உள்ளது. 17ம் நூற்றாண்டு பகுதியில் கவிராசரையும் அவருடைய கோணேசர் கல்வெட்டு, திருக்கோணமலை புராணம், கரசை புராணம் ஆகியவற்றையும் பண்டிதரால் பாடப்பட்ட கோணாசல புராணத்தையும் பிரதேச மரபுவழிவந்த மூத்த இலக்கிய வாதிகளால் பாடப்பட்ட குளக்கோட்டன் கம்பசரித்திரம், திருக்கோணாசலபுராணம், கைலாயமாலை, வையாபாடல், கோணமலை அந்தாதி, திருக்கோணாச்சல வைபவம், பெரிய வளமைபத்தி, மட்டக்களப்பு மான்மியம் போன்ற வரலாற்று சித்தி பெற்ற இலக்கியங்களையும் உள்ளடக்கும் பகுதியில் காப்பிய இலக்கணங்களுக்கு ஒப்ப எழுந்த ஈழத்தின் மூத்த புராணமாகிய தட்சிண கைலாயபுராணம் பற்றியும் அது 17ம் நூற்றாண்டுக்கு உரியது என்பது பற்றியும் குறிப்பிடுகிறார்

18ம் நூற்றாண்டு களத்திலே பயணிக்கும் ஆய்விலே திருக்கோணமலை புராணம், சந்தான புலவரின் திருகரசைபுராணம், வீரக்கோண் முதலியாரின் வெருகல் சித்திரவேலாயுதர் காதல், ஆறுமுகம் அவர்களின் கோணமலை அந்தாதி போன்ற வரலாற்று சிறப்புமிக்க நூல்களை விளக்கியிருக்கிறார். இக்காலத்திலே தான் திருக்கோணமலையில் மரபுவழிபட்ட இலக்கியங்களான அந்தாதி, புராணம், பிள்ளைத் தமிழ், உலா, தூது, ஊஞ்சல் போன்ற இலக்கிய வடிவங்கள் பிரதேச இலக்கிய கர்த்தாக்களால் பாடப்பட்டது என கூறுகிறார். இதற்கு ஆதாரங்களாக திருக்கோணமலை புலவர்களால் பாடப்பட்ட கோணவரைப்புராணம், கரசைபுராணம், திருக்கோணமலை அந்தாதி, திருக்கோணமலை மும்மணிமாலை, திருமலை பதிகம், விசாலாட்சியம்மன் கவிவெண்பா ஆகியன பற்றி விளக்கப்பட்டுள்ளது.

17 மற்றும் 18ம் நூற்றாண்டுகளில் மரபு வழிப்பட்ட புலவர் பெருந்தொகைகளால் திருமலை பிரதே இலக்கியம் வளர்ந்தோங்கப்பட்டமையும் பெரும்பாலும் இது திருக்கோணேஸ்வரத்தை மையப்படுத்தி வளர்ந்தமையும் இந்நூல் வாயிலாக அறியமுடிகின்றது.

19ம் நூற்றாண்டு பற்றி பேசும் போது இக்கால கட்டத்தில் நவீன கலை இலக்கிய மரபை ஆதரித்து பாரம்பரியம் மீறாத கலைஞர்களின் எழுச்சி தொடர்பாக ஆராயப்படுகிறது. சைவ புலவரான வே.அகிலேசபிள்ளையுடன் தொடங்கும் இப்பகுதி தி.த.கணகசுந்தரம்பிள்ளை, சரவணமுத்துப்பிள்ளை, எஸ்.இன்னாசித்தம்பி, அழகக்கோண், முத்துக்குமாரண், தம்பையாபிள்ளை, சட்டம்பி தம்பையா போன்ற பெரும்புலவர் பெரு மக்களையும் அவர்தம் இலக்கிய வடிப்பையும் விளக்குவதாய் அமைகின்றது. அகிலேசப்பிள்ளையின் கோண நாயகப் பதிகம் தொடங்கி கண்டி நாடகம் வரை குறிப்பிடும் இந்நூல் அன்னாரின் பதிப்பித்தல் ஆர்வத்தையும் பதிவு செய்துள்ளது. இன்னும் பெருமைப்பட்டு சொல்ல வேண்டிய விடயம், அகிலேசப்பிள்ளையின் கண்டிநாடகம் என்னும் நவீன கூத்து நூல் அச்சேற்றப்படாமல் கையெழுத்து பிரதியாக திருக்கோணமலை பொது நூலகத்தில் உள்ளது என்பது இந்நூலின் வருகையின் பின்னர்தான் எம்மவர்களின் சிந்தனையில் அச்சேற்றப்பட்டதும் நூல் உருவாக்க பல முனைப்புக்கள் பற்றி பேசப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலை கலை இலக்கிய வரலாற்றில் 19ம் நூற்றாண்டு முஸ்லீம் புலவர்களின் பங்களிப்பும் சாலையர், குப்பைத்தம்பி, உமறுநய்னா புலவர், முகைதீன் பிச்சைப் புலவர் போன்ற புலவர்களின் ஊடாக விளக்கும் ஆசிரியர் முஸ்லீம் சமூகத்தில் எழுந்த குட்டி காளி காவியம், கங்கை காவியம், புஹாரி காவியம், குறிஞ்சி முனை காவியம் ஆகிய படைப்புக்களை ஆதாரப்படுத்துகின்றார்.


ஆழ்ந்த கல்வி புலமும், அயராத தேடல் சக்தியும் இமியளவும் குன்றாத இலக்கிய இரசனையும் கொண்ட திருமலை நவம் அவர்கள் 20ம் நூற்றாண்டு கால வெளியிலே தகவல்களை சேகரிக்க பல்வேறுபட்ட பராக்கிரமங்களை மேற்கொண்டதாக பல இடங்களில் கூறி இருந்தார். அதன் உண்மை இந்த நூலில் 20ம் நூற்றாண்டு பகுதியை வாசிக்கும் போது அப்பட்டமாக தெரிகின்றது. 20ம் நூற்றாண்டு இலக்கியம் காலாகாலம் தனது திசைகளை பல்வேறு இடங்களில் மாற்றியமைத்த சூழலில் போர்கால மேகங்களின் கீழ் இருந்து தகவல்களை பெருதலும், சேகரித்தலும், பாதுகாத்தலும், உண்மையில் நவம் அவர்களுக்கு சவாலாகவே அமைந்திருக்கும்.

1950 களில் திருமலையின் கவிதை வளர்ச்சியோடு ஆரம்பிக்கும் 20ம் நூற்றாண்டை பத்து ஆண்டுகளாக வகுத்து குறித்த கால வளமாக்கிகள் தொடர்பாக விளக்கி இருப்பது வாசிப்பை இலகுபடுத்துகின்றது. இப்பகுதியில் திருமலையின் முன்னோடி கவிஞர்களான தருமுசிவராமு, அண்ணல், ஈழவானன், தா.சி.வில்வராஜன், சிவசேகரம், தாமரைத்தீவான் போன்றவர்களோடு நூற்றைம்பத்தொரு கவிஞர்களது சில குறிப்புக்களும், படைப்புக்களும் இடம்பெற்றுள்ளது.

திருக்கோணமலையில் 1948 களில் தொடங்குவதாக குறிப்பிடும் ஆய்வாளர் வ.அ.இராசரத்தினம், தி.அரியநாயகம், தா.பி.சுப்ரமணியம் போன்றோர்களோடு ஐம்பத்தேழு சிறுகதையாளர்களையும் அவர்தம் படைப்புக்களையும் பதியப்படுத்துகின்றார்.

மோகனாங்கியுடனும் 1891 இல் ஈழத்தின் மூத்த நாவலான ஊசோன் பாலந்தையுடனும் தொடங்கும் நாவல் இலக்கியபகுதி நாவலியல் கர்த்தாக்களான எஸ்.இன்னாசிதம்பி, த.சரவணமுத்துப்பிள்ளை உட்பட வ.அ.இராசரத்தினம், ந.பாலேஸ்வரி, போன்றோரோடு கிட்டத்தட்ட பதினாறு நாவலாசிரியர்களின் தொகுப்பை பேணுவதைக் காணலாம்.

திருக்கோணமலையில் தமிழ் நாடக வளர்ச்சி தொடர்பாக 1900ம் ஆண்டில் இருந்து நான்கு காலக்கோடுகள் மூலம் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. அண்ணாவி தம்பிமுத்து, அந்தோனிப்பிள்ளை, சித்தி அமரசிங்கம், அருளப்பு, ராஜரெட்னம், தில்லைமுகிலன் போன்ற சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாடக கலைஞர்கள் இப்பகுதியில் பதியப்படுத்தப்படுகின்றனர். அத்தியாயம் ஏழு திருக்கோணமலையின் இசைமரபு வளர்ச்சி பற்றியும் அத்தியாயம் எட்டு திருக்கோணமலையின் மெல்லிசை வளர்ச்சி பற்றியும் பின் இணைப்புக்களில் திருக்கோணமலையில் மேற்கொள்ளப்பட்ட அகராதி முயற்சிகள் பற்றியும் மற்றும் சிற்றிதழ்கள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆதனப்படுத்தல்களும் இடம் பெறுகின்றன. இந்நூலின் இன்னும் சிறப்பான அம்சம் இதுவரை எந்த இலக்கிய ஆய்வாளரும் குறிப்பிடாத பகுதிகளான இசைமரபு, மெல்லிசை மரபு ஆகியவற்றின் வரலாறுகள் பேசப்படலாம். திருக்கோணமலையின் இவ்விரு பகுதிகள் பற்றியும் நவம் அவர்களைத் தவிர வேறு எவரும் பேசமுடியா அளவுக்கு பன்முகத் தன்மையில் விளக்கியுள்ளார்.




## திருமலை வலயக் கல்விப் பணிமனையின் சமாதானக் கலாசார விழாவும்

### நித்திலம் சஞ்சிகை வெளியீடும்

06.12.2012 காலை 9.00 மணிக்கு திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்வீ பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன் தலைமையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ எம்.நஜீப் அப்துல் மஜீத், மற்றும் மாகாண கல்வித் திணைக்கள வலையக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் தமது கலாசார உடைகளுடனும், அதனை வெளிப்படுத்தும் நிகழ்வுகளுடனும் வலயக் கல்வித் திணைக்களத்திலிருந்து திருகோணமலை புனித சூசையப்பர் கலையரங்கிற்கு பவனியாக வருகை தந்தார்கள்.

இந் நிகழ்வுடன் இலவசப் பாடநூல் விநியோக ஆரம்ப நிகழ்வும் இடம் பெற்றது இதனை முதலமைச்சர் ஆரம்பித்து வைத்து பேசுகையில் 1948ம் ஆண்டு கல்வி அமைச்சர் C.W.W.கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்வியினை அறிமுகப்படுத்தியதற்கான காரணம் இனமத பேதமின்றி எல்லோரும் சமனாக விளங்க வேண்டும் என்பதற்காகவே. [illegible] இன்று இலவச [illegible] அவர்களின் அனுசரனையுடன் கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தலைமையின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது எனக்கூறினார்.

திருகோணமலை கல்வி வலயத்தின் ஆக்கத்திறன் தகவல் ஆவணப்படுத்தல் பிரிவின் வருடாந்த சஞ்சிகையான நித்திலம், வெளியீடு செய்யப்பட்டபோது அத்றகுப் பொறுப்பான கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா அவர்கள் பேசுகையில் கல்வி வலயத்தின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதுடன் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களை வெளியிடுவதுடன், சமூகத்துடன் கல்வி வலயத்தினை இணைத்துக் கொள்வதே இதன்நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

கல்வி பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சர் கிழக்கு மாகாணத்தின் பிரதிச் செயலாளர் எம்.றி.ஏ நிஸாம் பேசுகையில் சமாதானம் நிலவுவதற்கு சரியான தொடர்பாடலும், கலாசாரங்களையும் மதங்களையும் மதித்தலுமே முக்கியம் என்றார்.

வரவேற்புரையில் புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் வனபிதா அன்ரனி பொன்சியன் இந்நிகழ்வு எமது பாடசாலையில் இடம் பெறுவது சிறப்பு என்றார்.

நிகழ்வில் "பிரதீபா பிரபா" பெற்ற ஆசிரியர்களும் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் கிழக்கின் முதலமைச்சரும் கௌரவிக்கப்பட்டார்.

**இவ் வைபவம் தொடர்பான புகைப்படங்களை 3ம் பக்கத்தில் காணக**

(வசந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## இறைச்சியென நினைத்துக் குழந்தையைக் குதறிய நாய்



ஹரிஹாப்பர் என்னும் எட்டு நாட்கள் நிரம்பிய ஆண்குழந்தையை வளர்ப்பு நாயோன்று கடித்துக் குதறிக் கொலை செய்துள்ளது. வீட்டு நாயே இவ்வாறு கடித்துக் குதறியுள்ளது. தனது தாயுடன் அம்மம்மாவின் வீட்டில் இருந்த குழந்தைக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது

## ஈரான் - ஆளில்லா அமெரிக்க உளவுவிமானம் கைப்பற்றப்பட்டது அமெரிக்கா - ஈரானியக் கூற்றை நிரூபிக்கும் சான்றுகள் எவையுமில்லை



ஈரானிய வான் பரப்பினுள் நுழைந்த அமெரிக்க ஆளில்லா விமானமொன்றைக் கைப்பற்றியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. போயிங் விமானக் கம்பனியின் தயாரிப்பான நான்கடி நீள ஸ்கான் ஈகிள் வகை விமானமே கைப்பற்றப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும் அவ்வாறு கைப்பற்றப் பட்டதை நிரூபிக்கும் கான்றுகள் எவையும் தம்மிடமில்லை என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித் துள்ளார். மேலும் பஹ்ரெயினிலுள்ள அமெரிக்க மத்திய கட்டுப்பாட்டுப்பிரிவின் பேச்சாளர் தமது விமானங்கள் யாவும் திரும்பியுள்ளதாகவும் அவை கணக்கெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## மூக்கினால் ஒழுகியது மூளைத் திரவம்



அமெரிக்க அரிசோனா மாநிலத்தின் அரிசோனா பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட அன்ரே அறகன் என்னும் 35 வயது தாயாரின் மூக்கிலிருந்து கடந்த நான்கு மாதங்களாக வழிந்த திரவம் அவரது மூளையிலிருந்தே வெளிவந்துள்ளது என்பதை அப்பல் கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். நான் குனிந்தாலோ வளைந்தாலோ என் இடது மூக்கு கட்டுப்பாடில்லாமல் ஒழுகத் தொடங்கி விடும். மூளைத்திரவம் அங்கேற்பட்டுள்ள இரண்டு வெடிப்புக்களின் ஊடாக வெளியேறி மெதுவாக மூக்கின் ஊடாகக் கசிகின்றது என்பதை வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவ்வகைக் கசிவு நூறாயிரம் அல்லது இருநூறாயிரம் மக்களில் ஒருவருக்கே ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். மூளைத்திரவம் சுரந்துகோண்டே இருப்பதால் அது வடிவது இங்கு பிரச்சனை அல்ல. ஆனால் உடலின் மிகச் சுத்தமான பகுதியான மூளை உடலின் மிக அழுக்கான பகுதியான மூக்குடன் இத்திரவக் கசிவின் ஊடாக தொடர்பைக் கொண்டு விடும். இதனால் மூளையில் ஏற்படப் போகும் தொற்றுக்களே விபரீதமானவை என மேலும் அவர்கள் தெரிவித்தனர்

## திருத்தப்பட்ட மூலக்கூற்று மீன் - மனிதப் பாவனைக்கு வருமா?

பனாமாவின் மழைக்காடுகளின் நடுவே பெரிய சுவர்களையும் பூட்டப்பட்ட கதவுகளையும் முட்கம்பி வேலிகளையும் கொண்டு பாதுகாக்கப்பட்ட மறைவிட ஆராய்ச்சிக் கூடத்தில் மீன்களின் மூலக்கூற்றை மாற்றியமைக்கும் பணியில் ஸ்டோனிபீல்ட் பண்ணை விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். மிருகங்களின் மூலக்கூற்றியலை மாற்றியமைப்பதானது மிகவும் செயற்கையானது என்பதுடன் அசாத்தியமானதும்கூட என அவர்கள் தெரிவித்தனர். உவர்மீன் இனமான சல்மன் மீன்களின் மூலக்கூற்றினை மாற்றியமைத்து புரதச் சத்துக் கூடிய கனிப்பொருட்கள் நிறைந்த உணவுப் பொருளாக உருவாக்கும் 20 வருட முயற்சியில் அவர்கள் வெற்றியடைந் துள்ளதாகவே தெரிவித்துள்ளனர்.

## ஆண் ஓரினச் சேர்க்கையாளருக்காய் உருவாகின்றது வணக்கத்தலம்



ஐரோப்பாவின் பிரான்ஸ் நகரில் ஆண் ஓரினச் சேர்க்கையாளருக்கான வணக்கத் தலமொன்று உருவாக்கப் படவுள்ளதாக லுடோவிக் மொகமட் சகீட் என்னும் ஓரினச் சேர்க்கையாளர் தெரிவித் துள்ளார். எவ்விதமான பால் வேறுபாடு களுமின்றி இவ் வணக்கத்தலத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள எவரும் வரலாம் என அவர் தெரிவித்தார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

- பிரதீபா -

1. கீழ் உள்ள தாவரங்களில் தண்டில் காய்க்கும் தாவரம் எது?
   1. கொய்யா 2. விளிம்பி 3. வேம்பு
2. இலங்கைக்கு அதிக மழைவீழ்ச்சியைப்பெற்றுத் தரும் காற்று எது?
   1. தென்மேல் பருவக்காற்று 2. வடகீழ் பருவக்காற்று
   3. சூறாவளிக் காற்று
3. திசை காட்டியின் முள் எப்போதும் காட்டும் திசை
   1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு
4. கொழும்பிலிருந்து பதுளை வரையுள்ள புகையிரதப் பாதையிலிருக்கும் ஒரு புகையிரத நிலையம்?
   1. வட்டவளை 2. ஹபரணை 3. வவுனியா
5. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு எது?
   1. குளவி 2. பாம்பு 3. கறையான்
6. கத்தி தீட்டப் பயன்படும் உபகரணம் எது?
   1. சுத்தியல் 2. உளி 3. அரம்
7. 1948வது வருடம் எத்தனையாம் நூற்றாண்டு?
   1. 19 நூற்றாண்டின் முற்பகுதி 2. 20 நூற்றாண்டின் பிற்பகுதி
   3. 19 நூற்றாண்டின் பிற்பகுதி
8. தாவரங்கள் அதிகளவில் அழிக்கப்படுவதனால் புவி வெப்பமடைகிறது. இவ்வாக்கியத்தில் உள்ள அஃறிணை ஒன்றன்பால் நிகழ்காலச் சொல் எது?
   1. அதிகளவில் 2. அழிக்கப்படுவதனால் 3. அடைகிறது
9. மிகக் குறைந்தளவு நீரில் வளர்ந்து பயன்தரக்கூடிய பயிர்களில் ஒன்று?
   1. நெல் 2. சோளம் 3. எள்
10. பொலி பொலி தாயே, பொலி தம்பிரானே... என்னும் பாடலின் வகை யாது?
    1. சூடுமிதித்தல் 2. கோலாட்டம் 3. அரிவுவெட்டுதல்

**11, 12 ம் வினாக்களுக்கு கீழுள்ள தகவலை வாசித்து விடையளிக்குக.**

நெடுஞ்சாலை ஒன்றின் ஒரு பக்கத்தில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் மொத்தமாக 95 கொடிகள் நாட்டப்பட்டுள்ளன.

11. சம எண்ணிக்கையில் உள்ள கொடிகள்?
    1. பச்சை, நீலம் 2. சிவப்பு, மஞ்சள் 3. மஞ்சள், நீலம்
12. 67வது கொடியின் நிறம் யாது?
    1. சிவப்பு 2. மஞ்சள் 3. நீலம்
13. "சந்தை" என்பதன் ஆங்கிலச் சொல்லினை குறியீட்டு வடிவில் எழுதினால் அமையக் கூடிய முறை?
    1. 365987 2. 322685 3. 365995
14. கல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் பொன்விழா 2010ல் கொண்டாடப்பட்டது. எனின், கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
    1. 1960 2. 1985 3. 1950

**15, 16 ம் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவலை வாசித்து விடையளிக்குக.**

கமால் தனது சம்பளத்தின் அரைப்பகுதியை உணவிற்கும், மிகுதியில் கால்பகுதியை தனது அம்மாவிடம் கொடுத்தான். எஞ்சிய பணத்தில் ரூபா 800 பெறுமதியான புத்தகங்கள் 5 வாங்கியபின் அவனிடம் ரூபா 2000 எஞ்சியிருந்தது. எனின்,

15. அவன் அம்மாவிடம் கொடுத்த பணம் எவ்வளவு?
    1. ரூபா 1,000 2. ரூபா 2,000 3. ரூபா 8,000
16. அவனுடைய முழு சம்பளம் எவ்வளவு?
    1. ரூபா 8,000 2. ரூபா 16,000 3. ரூபா 32000
17. ஓர் பண்ணையில் மாடுகளும், கோழிகளுமாக பிராணிகள் இருந்தன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 64 தலைகளின் எண்ணிக்கை 20 உம் ஆகும். எனின், அப்பண்ணையில் இருக்கும் மாடுகளின் எண்ணிக்கை யாது?
    1. 8 2. 18 3. 12
18. என்னிடம் ரூபா 5 நாணயங்களும், ரூபா 10 நாணயங்களும் மாத்திரம் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 150 அதன் படி என்னிடமுள்ள ரூபா 10 நாணயங்களின் பெறுமதி யாது?
    1. 9 2. ரூபா 90 3. ரூபா 60
19. தாங்கி ஒன்றை நிரப்புவதற்கு ஒரு நிமிடத்தில் 30L நீரை நிரப்பும் குழாயும், இரண்டு நிமிடத்தில் 70L நீரை நிரப்பும் குழாயும் பொருத்தப்பட்டுள்ளது. இருகுழாய்களும் ஒன்றாகத் திறக்கப்பட்டால் தாங்கியானது 24 நிமிடங்களில் நிரம்பிவிடும். எனின், தாங்கியின் கொள்ளளவு யாது?
    1. 1560 L 2. 2400 L 3. 3120 L
20. கனவுரு ஒன்றிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
    1. 4 2. 20 3. 24
21. வரிசையொன்றில் 32 மாணவர்கள் நிற்கின்றனர். குமார் பின்னால் இருந்து 11ஆவதாக நிற்கின்றான் எனின், முன்னாள் இருந்து எத்தனையாவதாக நிற்கின்றான்?
    1. 21 2. 22 3. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியுமா உலகம் இருபத்தொன்றில்

21 டிசெம்பர் 2012 இல் உலகம் தன் அழிவை எட்டும் என்ற பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு வித்திட்டது "மாயன்களின் நாட்காட்டி" என்றே கூறலாம்.

"யார் இந்த மாயன்கள்?"

அமெரிக்க கண்டத்தின் அதி சிறந்த பாரம்பரியங்களை வகுத்தவர்களுள் ஒன்றாகக் காணப்படும் மாயர்கள் சுதேசிய மெசோ அமெரிக்க கலாச்சாரத்திற்கு சிறந்த உதாரணமானவர். இவர்கள் கலை, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வானியல் ஆய்வுகளின் முன்னோடிகள் ஆவார்கள். மெக்சிக்கோவின் பல பகுதிகளிலும், மத்திய அமெரிக்காவிலும் மாயன் கலாச்சாரத்தின் செல்வாக்கை இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

"மாயன்களின் நாட்காட்டி முடிவடைகிறதா?"

மாயன் நாட்காட்டி பிரிந்தும் இணைந்தும் செயற்படும் வகையில் 3 சுழற்சிக் காலப்பகுதிகளைக் கொண்டது.

1. பொதுவான சுழற்சி (The Long Count
2. தெய்வீக சுழற்சி ( The Tzolkin)
3. சிவில் சுழற்சி ( The Haab )

இவற்றுள் வானியல் நாட்காட்டியாகக் கருதப்படும் பொதுசுழற்சியானது (The Long Count ) 2,880,000 நாட்களைக் (7885 வருடங்கள்) கொண்டது. இப்பொது சுழற்சி முடிவடைந்து மீண்டும் ஆரம்பிக்கும் தருணத்தில் உலகம் அழிக்கப்பட்டு புதிதாக உருவாக்கப்படும் என்பது மக்களின் நம்பிக்கை. தற்காலத்தில் உலகழிவு தொடர்பாக எண்ணிலடங்காத எதிர்வு கூறல்கள் முன் வைக்கப்படுவதற்கும் மக்களின் இந்த நம்பிக்கையே தளம் அமைத்துள்ளது.

எவ்வாறுள்ள போதிலும் மாயன் கலண்டர் முடிவடைவது என்பதும், டிசெம்பர் 31 இல் எம் நாட்காட்டி முற்றுப் பெற்று ஜனவரி 01 இல் புதிய வருடத்தை ஆரம்பிப்பது போன்ற சாதாரண சுழற்சியேயாகும்.

"பிறிதொரு சூரிய மண்டலத்திற்குரிய கோளாக கூறப்படும் "நிபுரு" பூமியை விட 4 மடங்கு பெரியது. இது பூமியை அண்மிக்கின்றதா?"

பூமியை விட பெரியதாக இருக்கும் இக்கோள் டிசெம்பர் 21 இல் பூமியை அண்மிக்க தயாராகின்றது என்றால் தற்சமயத்திற்கு இக்கோளானது இரவு வேளைகளில் வெற்றுக்கண்ணால் நோக்க கூடிய வகையில் பூமியை நெருங்கியிருக்க வேண்டும். ஆனால் நாசா உட்பட உலகின் எந்த வானியலாளர்களின் தொலைகாட்டி கண்களிற்கும் புலப்படாத இக்கோள் பற்றி பொதுமக்கள் அச்சம் கொள்வது குறித்து NASA ஆச்சர்யம் தெரிவிக்கின்றது.

"டிசெம்பர் 21 இல் உருவாகும் சூரிய புயல் பூமியை தாக்குமா?"

ஒவ்வொரு 11 வருடங்களிற்கும் ஒரு தடவை உச்ச கட்டத்தை அடையும் வகையில் சூரியனின் செயற்பாடு ஒரு வட்டப்பாதையில் இடம்பெறும். இதன்படி அடுத்த உச்சகட்ட நிலை 2013 மே மாதத்தில் எதிர்பார்க்கப்படுவதோடு, இது தீவிரமற்ற சாதுவான தொழிற்பாடாக அமையும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. இச் செயற்பாடு சூரியப் புயலை உருவாக்கும் என்பதற்கும் சான்றுகள் புலப்படவில்லை.

"2012 டிசெம்பர் காலப்பகுதியில் பூமி தன் அச்சை விட்டு விலகி அனர்த்தங்களை தோற்றுவிக்குமா?"

பூமியின் சுழற்சி பாதையில் அமைந்துள்ள சந்திரன் பூமியை சூரியனின் சுழற்சிப்பாதையில் இருந்து விலக்கிவிடாது கட்டுப்படுத்தும். எனினும் காந்த சக்தியால் இயங்கிவரும் எந்தவொரு பொருளும் குறிப்பிட்டகால இடைவெளிகளில் தன் அச்சை மெல்ல நகர்த்துவது சாதாரண நிகழ்வே ஆகும். சுமார் 740000 வருடங்களிற்கு முன்னர் இந்நிகழ்வு நடந்தேறியதாகவும், இவ் வருடத்தில் இதற்கான சாத்தியக் கூறுகள் உள்ள இல்லையெனவும் நாசா உறுதிப்படுத்துகிறது. பூமி தன் அச்சிலிருந்து விலகினாலும் கூட எமது திசை காட்டும் கருவியில் குறியை சீர் செய்வதைத் தவிர வேறெந்த விழைவுகளும் ஏற்படாது எனவும் கூறப்படுகிறது.

"சூரியன், சந்திரன், பூமி உட்பட பிற கோள்களின் நேர்கோட்டு சீரமைப்பு (Planetary Alignment) ஏற்படுமா? இதனால் தோன்றும் அசுர அலைகள் மனித இனத்திற்கு முடிவு கட்டுமா?"

பூமிக்கு மிகவும் அண்மையில் உள்ள சந்திரன், மற்றும் பூமியை விடப் பன்மடங்கு பெரியதாகக் காணப்படும் சூரியன் இவ்விரண்டின் செல்வாக்கால் மாத்திரமே பூமியின் அலைகளில் ஆக்ரோஷத்தைக் கொண்டுவர முடியும். எனைய கோள்கள் பூமியில் அதி குறைந்த பட்ச தாக்கத்தையே விளைவிக்க கூடியன. இவ்வருடத்தில் கோள்களின் சீரமைப்பு ஏற்பட எதுவித வாய்ப்பும் இல்லை.

"கலியுகத்தின் இறுதி காலத்தில், விஷ்ணு தனது 10வது அவதாரமான கல்கியாக அவதரிப்பார் என்ற சமய நம்பிக்கையின் படி உலகின் முடிவு எனக் கூறப்பட்டு வரும் இந்த டிசெம்பர் மாத காலப்பகுதி தான் கலியுகத்தின் முடிவா?"

சத்ய யுகம், த்ரோதா யுகம், துவபார யுகம், கலியுகம் இவை நான்கும் தொடர்சியாக இடம்பெறும். இவற்றுள் தற்போது நாம் வாழும் காலமாக கருதப்படும் கலியுகமானது மொத்தமாக 432000 வருடங்களை உள்ளடக்கியுள்ளது.

குருஷேத்திர போர் நடந்தேறியதை தொடர்ந்து கி.மு3102, ஜனவரி 23 இல் விஷ்ணு தன் ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்தை முடித்து பூமியை விலக்கியதாகவும் அத்தினத்தின் நள்ளிரவே கலியுகத்தின் ஆரம்பம் எனவும் சமய வரலாறுகள் கூறுகின்றன. இதன்படி இன்று வரை நாம் கலியுகத்தின் 5000 வருடங்களை மாத்திரமே கழித்திருக்கின்ற நிலையில் எனினும் 427000 வருடங்களிற்கு கலியுகம் தொடரும். எனவே 2012 இன் உலக முடிவு தொடர்பான கதைகளிற்கும் கலியுக முடிவிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதைச் சமய அடிப்படையில் உறுதிப்படுத்தலாம்.

மிகைப்படுத்தி கூறப்படும் எந்தவெரு விடயத்திற்கும் மிகைப்படுத்தப்பட்ட சான்றுகள் அவசியம். வானியல் வரலாறுகள் பதியப்பட்ட ஆண்டுகள் தொடக்கம், உலகழிவு தொடர்பாக பல்லாயிரக் கணக்கான எதிர்வு கூறல்கள் முன்வைக்கப்பட்டும் கூட நாம் இன்று பூமியில் வாழ்வதே திண்ணம்.

பைரவி

# பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக அணி திரண்ட மூதூர்ப் பெண்கள் கையளித்த மகஜர்




2012.12.05 பதாகைகள் தாங்கியபடியான அமைதியான பேரணி மூதூர் பிரதானவீதி வழியாக மூதூர் பிரதேச செயலகத்தை அடைந்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

தற்காலத்தில் பெண்கள், சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மூதூர் பிரதேச பெண்கள் வலையமைப்பினால் முன்வைக்கப்படும் மனு. மேற்படி எமது மூதூர் பிரதேச பெண்கள் வலையமைப்பானது பெண்கள் வன் முறைக்கெதிரான 16 நாள் செயற்றிட்ட வாரத்தை முன்னிட்டு மூதூர் பிரதேசத்தில் பெண்கள் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சிலவற்றை அடையாளப்படுத்தியுள்ளோம். அப் பிரச்சினைகளும் அதன் விளைவுகளும் வருமாறு.

1. தற்காலத்தில் பெண்கள் அதிகமாக வெளிநாடு செல்லல்.

2. மதுவினால் ஏற்படும் இல்லத்து வன்முறைகள்.

இவ்விரண்டு விடயங்களினால் குடும்பத்தில் பிரிவுகள் ஏற்படுகின்றன. அத்துடன் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படுவதுடன், சிறுவர்கள் துஸ்பிரயோகத்துக்குள்ளாகும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் பாதுகாப்பற்ற வெளிநாட்டுப் பயணத்தினால் பெண்கள் ஏமாற்றத்துக்குள்ளாகி துன்புறுத்தல் மற்றும் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு வெளிநாடு சென்றவர்களின் விபரம் கிராம அடிப்படையில் இணைக்கப் பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதுடன் இதற்கான தீர்வுகளையும் வழங்குவதற்காக மூதூர் பிரதேசத்தில் உள்ளடக்கப்பட்ட கிராமங்களில் சிவில் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும் வெளிநாடு செல்லல், மதுப்பிரச்சினை என்பன தொடர்ந்தும் இடம்பெற்ற வண்ணமே உள்ளது என்பது கடந்த 3 மாத காலத்தில் எம் அமைப்பினூடாக பெற்றுக்கொண்ட தகவல்களாகும்.

இது தவிர்ந்த எம்மால் அடையாளப்படுத்தமுடியாத எத்தனையோ பெண்கள் பணிப் பெண்களாக வெளிநாடு செல்கின்றார்கள் என்பதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். இதனால் குடும்பத்தில் பல பிரச்சினைகள், குடும்பப் பிரிவுகள், சிறுவர்களின் பாதுகாப் பற்றநிலை தொடர்பான அச்சமும், பிள்ளைகளின் கல்விநிலை பாதிப்பு போன்ற பிரச்சினைகள் நிலவி வருகின்றது. வெளிநாடு செல்பவர் களுக்கான வரையறுக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி பெண்களுக்கான சட்டரீதியான கொள்கைகள் பல வரையறுக்கப் பட்டிருக்கின்ற போதிலும் அக்கொள்கை களைப் பின்பற்றாது சட்டரீதியற்ற முறையில் நேரடியாக அங்கீகாரமற்ற முகவர்களினூடாக கொழும்பு நகருக்குச் சென்று கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றைப் பெற்று பாதுகாப்பற்ற முறையில் வெளிநாடு செல்வதன்மூலம் சரியான ஊதியம் இன்றியும், உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டும் நாடு திரும்பியுள்ளனர் என்பது அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினைகளாக உள்ளன.

எனவே இந்த நிலையில் பிரதேச செயலகத்தினால் பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டும் மற்றும் எமது சங்கங்களின் விழிப்புணர்வுச் செயற் பாடுகள் இடம்பெற்ற போதிலும் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளது என்பதனைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன் இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக தங்கள் செயலகத்தினூடாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது வலையமைப்பும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராகவுள்ளது என்பதனை பெண்கள் வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்றிட்ட நிகழ்வில் பெண்கள் சார்பாக தங்கள் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம். மூதூர் பிரதேசத்தில் கடந்த 3 மாத காலத்துள் வெளிநாடு சென்றவர்கள் விபரம் வருமாறு.

| கிராமம் | எண்ணிக்கை |
|---|---|
| ஆலிம்நகர் | 19 |
| பெரியவெளி | 25 |
| மேன்கமம் | 18 |
| பாரதிபுரம் | 19 |
| பட்டித்திடல் | 12 |
| புளியடிச்சோலை | 04 |
| முன்னம்போடிவெட்டை | 03 |
| மல்லிகைத்தீவு | 03 |

(ஜெயாகரன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்களுக்கெதிரான...**

அமைச்சின் உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து பேரணியினரை வரவேற்று உரையாற்றிய பின் பிரதேச செயலாளர் மகஜரை ஏற்று கோரிக்கைகளுக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து அணியினர் மீண்டும் தமதிடங்களை நோக்கி கலைந்து சென்றனர்.

(கையளிக்கப்பட்ட மகஜரின் முழு விபரங்களையும் பக்கம் 6 ல் காண்க)

**முன்னாள் ஆயர் ....**

பத்து வருடங்களாக 1973ம் ஆண்டிலிருந்து இவர் 1983 வரை இவ்விரு மாவட்டங்களின் ஆயராகப் பணிபுரிந்து சமய வளர்ச்சிக்காகப் பெருந் தொண்டாற்றியிருந்தார்.

ஆண்டகையின் திருவுடல் உவர் மலையில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் 5ம் திகதிவரை வைக்கப்பட்டிருந்து பின்னர் 6ம் திகதி புனித மரியாள் பேராலயத்தில் அஞ்சலிக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

**சொந்த...**

சூழலை எதிர்கொள்ளவில்லை எனவும் இவ்விடயத்தை மூதூர் காவல் துறையினருக்கும், பிரதேசச் செயலருக்கும் தெரியப்படுத்தியிருந்த போதும் நடவடிக்கைகள் எவையுமே தற்போது வரை எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். எனவே இவ்விடயம் தொடர்பாக தான் கடிதமொன்றை கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ளதாகவும் அதன் பிரதியை மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் திரு தண்டாயுதபாணியும் அண்மையில் திருமலைக்கு வருகை தந்திருந்த பிரதி ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகரிடமும் தெரியப் படுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## குழந்தை பெற்றால் கொட்டும் காசு

ஐந்து குழந்தைகளைப் பெற்றால் பணப்பரிசு வழங்கப்படவுள்ளதாக சிங்களக் குடும்பங்களை நோக்கி பிரான்ஸ் நாட்டு பிரதான சங்க நாயக்கர் தெரிவித்துள்ளார்.

சிங்கள குடும்பங்களில் பிள்ளைகள் பிறப்பது குறைந்துள்ளதன் காரணமாக எதிர்காலத்தில் குறைந்தது 5 பிள்ளைகளை பெறும் சிங்கள குடும்பங்களுக்கு பணப் பரிசு வழங்கப்படும் என பிரான்ஸ் நாட்டுக்கான பிரதான சங்க நாயக்கர் பரவாஹெர சந்தரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் அடுத்த வருடத்தில் இருந்து அமுலுக்கு கொண்டு வரப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள குடும்பங்கள் குழந்தைகளை பெற்றெடுப்பது குறைந்துள்ளதால். எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க நேரிடும் எனவும் இந்த பாதிப்பு பௌத்த மதத்திற்கும் கெடுதியை உண்டுபண்ணும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள குடும்பங்களில் பிள்ளைகள் இல்லாது போனால், துறவறம் பூணவும் பிள்ளைகள் இல்லாமல் போகும் எனவும் இதனால். நேபாளம். பங்களாதேஷ் போன்ற நாடுகளில் உள்ள பௌத்தர்களுக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படும். எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமையானது சிங்கள இனத்தின் பாரிய அழிவுக்கு வழிகோலும் என்பதால். தான் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் பரவாஹெர சந்தரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

(கதிரவன்)

## ஆலங்கேணி கொலை.....

ஆலங்கேணியில் கொல்லப்பட்ட கந்தையா செல்லம்மாவின் கொலை தொடர்பான விபரங்கள் வெளியாகி யுள்ளன.

அருகருகே இரு வீடுகளில் தனது மக்களுடன் வசித்து வந்த திருமதி கந்தையா செல்லம்மா 30.11.2012 அன்று காலையில் ஆலங்கேணியிலுள்ள அவரது வீட்டில் பிணமாகக் கிடந்துள்ளார். அவரது உடலத்தின் தலைப்பகுதியில் காயமொன்று காணப்பட்டுள்ளதுடன் வாய் சத்தம் எழுப்ப இயலாதவாறு மூடப்பட்டு மிருந்துள்ளது.

காலையில் அயலவர்கள் அனைவரும் அவ் விடத்திற்கு வந்த போது செல்லம்மாவின் கைகளில் சாரமொன்று சிக்குற்றிருந்ததைக் கண்டுள்ளனர். அச் சாரத்தினால் அவரது வாய் மூட எத்தனிக்கப் பட்டிருந்ததாகவோ அல்லது தலைக் காயத்தைக் கட்ட முயற்சி நடந்துள்ளதாகவோ இருக்கலாம் என அயலவர்கள் நினைத்துள்ளனர். அச் சாரம் செல்லம்மாவினுடையது என்பதாகவே அயலவர்களின் எண்ணமும் இருந்தது. எனினும் செல்லம்மாவின் வீட்டிலிருந்து ஒரு வீடு தள்ளி வசித்து வந்த பெண்ணொருவர் உடலத்தைக் காண்பதற்காக அங்கு வந்துள்ளார். அவ் வேளையில் காவல்துறையினரோ அல்லது பெருமளவு மக்களோ அங்கு கூடியிருக்கவில்லை. உடலத்தைக் காண வந்த அப் பெண் தனது தம்பியின் சாரம் ஏன் இங்கு கிடக்கின்றது என்று சொல்லிக் கொண்டு அவசர அவசரமாக அச் சாரத்தை எடுத்துக்கொண்டு தனது வீட்டிற்கு நடையைக் கட்டியுள்ளார். இதைக் கண்ணுற்ற சிலர் அமைதியாக அக்கணத்திலிருந்து விட்டு சம்பவ இடத்திற்குக் காவல்த்துறையினர் வந்த போது விடயத்தைக் கசிய விட்டுள்ளனர்.

தகவல்களைத் திரட்டிக் கொண்ட காவல்த்துறை உடலத்தை விட்டு விலகாமல் நீதிவான் விசாரணை அங்கு முடியும்வரை அமைதியாய் இருந்துள்ளனர். அவ்விசாரணை நிறைவுபெற்று உடலத்தை வைத்தியசாலைக்கு அனுப்பும்படி நீதிவான் உத்தரவிட்டதன் பின்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது காவல்த்துறை.

அயல் வீட்டிற்குச் சென்ற காவல்த் துறையினர் குறித்த அச் சாரம் துவைத்துக் காயப் போட்டிருந்ததைக் கண்டுள்ளதுடன் அச் சாரத்திற்குரியவர் அப்போது தான் அயல்க் கிராமத்திலிருந்து வருகை தந்ததையும் கண்டுள்ளனர். அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது தான் அப்போது தான் அயல்க் கிராமத்திலுள்ள தனது வயலிலிருந்து வருவதாகவும் கடந்த நாளின் மாலைப் பொழுதிலேயே அங்கே சென்று விட்டதாகவும் காவல்த்துறைக்குத் தெரிவித்துள்ளார். ஆனால் அங்கும் அவருக்கு சூழல் ஒத்திசைக்கவில்லை. ஏனெனில் அவர் கொலை நடந்த அன்று இரவு ஒரு மணியளவில் அவரது வீட்டுக் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்ததை மற்றொரு அயல்வீட்டில் நடந்த நிகழ்ச்சியொன்றிற்கு சோடனை வேலைகள் செய்ய வந்திருந்தவர்கள் கண்டுள்ளதுடன் ஆச்சரியத்துடன் நடு இரவு கடந்த பின் ஏன் இவர் குளிக்கின்றார் என தம்மிடையே வினவியிருந்ததையும் காவல்துறைக்குச் சொல்லியிருந்தனர்.


வரவழைக்கப்பட்ட மோப்ப நாயின் உதவியுடன் சந்தேகநபரின் உள்ளாடையைப் பற்றைக்குள்ளிருந்து மீட்ட காவல்த்துறையின் விசாரணையில் சந்தேகநபர் தான் எவ்வாறு கொலை செய்தான் என்னும் விபரத்தை

## முத்சவெளியில்

கணக்காளோர் பல்வேறு சேவைகளை பெற்றுக் கொண்டனர்.

இந் நடமாடும் சேவையின் போது அடையாளஅட்டை முதியோர் அடையாள அட்டை கடவுச்சீட்டு என்பவற்றிற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டதோடு புகைப்படங்களை இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று உதவி புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

முதியோர் அடையாளர் அட்டை உடனடியாக வழங்கப்பட்டதுடன் சமுர்த்தி திட்டத்தின் கீழ் வாழ்வாதார கடன்கள் உடனடியாக வழங்கப்பட்டன. திருமணப்பதிவின்றி இருந்த மூன்று தம்பதிகளுக்கு திருமணப்பதிவு நடாத்தி வைக்கப்பட்டது.



வெளியிட்டுள்ளான்.

செல்லம்மாவிடம் நகை இருப்பதைப் பல நாட்களாகவே அவதானித்துள்ள அவ்வயல் வீட்டுச் சந்தேகநபர் 29.11.2012ன் இரவில் அவற்றைக் கொள்ளையடிக்கவே திட்டமிட்டிருந்தான். அன்றைய இரவில் செல்லம்மாவின் மகளின் மகளும் (பேத்தியும்) செல்லம்மாவின் வீட்டில் இரவு தூங்கியுள்ளார் எனினும் சுமார் 11 மணியளவில் அப் பேத்திக்கு காய்ச்சல் காயத் தொடங்கவே அவரை அருகிலுள்ள மகளின் வீட்டுக்கு அனுப்பியுள்ளார் செல்லம்மா. அதற்காகக் திறந்த கதவைச் சரிவரப் பூட்டாமல் இருந்ததால் சந்தேகநபர் சுமார் 12 மணியளவில் செல்லம்மாவின் வீட்டிற்குட் புக ஏதுவாக இருந்துள்ளது.

வீட்டினுள் ஆளரவத்தைக் கேட்டு விழித்த செல்லம்மா கத்த முனைந்த பொழுது தனது சரத்தைக் கொண்டு சந்தேகநபர் அவரின் வாயை மூட முயற்சித்துள்ளான். எனினும் போராட்டம் தொடரவே டோர்ச் விளக்கால் செல்லம்மாவின் தலையில் அடித்துள்ளான். அதைத் தொடர்ந்து செல்லம்மா மூர்ச்சை அடைந்த போதிலும் அந்தச் சாரத்தை விட்டுவிடவில்லை.

நேரம் சென்று கொண்டிருந்ததால் சாரத்தை அவிழ்த்துவிட்டுச் சந்தேகநபர் நகைகளை அனைத்து இடங்களிலும் தேடிய போதிலும் அவை அவனது கைக் கெட்டவில்லை. அதனால் செல்லம்மா அணிந்திருந்த சுமார் நான்கு பவுன் அளவுள்ள சங்கிலியை மட்டும் எடுத்துக் கொண்டு நடையைக் கட்டிய சந்தேகநபர் தனது வீட்டிற்குச் சென்று குளித்துவிட்டு உடனடியாகவே அயல் கிராமத்திற்கு இரவோடிரவாகச் சென்றுள்ளார்.

செல்லம்மாவின் மரண விசாரணை அறிக்கைகளின் படி அவர் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகியே மரணமாயுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என அவரது உறவினர் ஒருவர் தெரிவித்தார். தலையில் ஏற்பட்ட காயத்தால் அம் மரணம் நிகழவில்லை என்பதுடன் கொலைக்கு ஏதுவான நகைகளை செல்லம்மா தனது உடலுடன் கட்டி வைத்திருந்ததை காவல்த்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இறந்த பின்னும் செல்லம்மாவின் உடலத்தை அவரது இரு மகள்களினதும் வீடுகளில் ஒருவரது வீட்டிலேனும் அடக்கம் செய்யும்வரை வைத்துக்கொள்ள அவ்விரு மகள்களும் அனுமதிக்காதது பெரும் கவலையைக் கிராமத்தவர்களுக்கு உண்டு பண்ணியுள்ளது., அவ்விரு பிள்ளைகளுக்கும் இடையிலான தகராறால் செல்லம்மாவின் உடலம் அவர் கொலையுண்ட வீட்டின் முன் பகுதியில் தற்காலிகமாக இடப்பட்ட கொட்டகையொன்றில் வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. காவல்த்துறை கொலைச்சந்தேக நபரையும் அவருக்கு உடந்தையானார் என்னும் குற்றச்சாட்டில் அவரது சகோதரியையும் கைது செய்துள்ளது. செல்லம்மாவின் வீடு பூட்டி [illegible] இடமாக காவல் [illegible]ரையறுக்கப்பட்டுள்ளது.

## கற்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்த....

புல்மோட்டை மத்திய கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் கடந்த வாரத்தில் கற்தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளமை கல்விச் சமூகத்தைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

பாடசாலை முடிந்து திருமலை நகருக்கு ஏனைய இரு ஆசிரியர்களுடன் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் புல்மோட்டையின் ஓடாமலை என்னும் இடத்தில் வைத்து அவ் ஆசிரியர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். முகத்தை மூடிக்கட்டிய குழுவொன்றே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த ஆசிரி யர்களில் குறிப்பட்ட ஒரு ஆசிரியரை மட்டுமே குறிவைத்து தாக்குதல் நிகழ்ந்துள்ளது. கற்களால் தாக்கப்பட்ட அந்த ஆசிரியர் தலையில் பலத்த காயமடைந்துள்ளார்.

சம்பவத்தை நேரில் கண்ட சிலர் அவ்விடத்திற்கு விரைந்து வந்து காயமடைந்த ஆசிரியரை மற்றோர் முச்சக்கர வண்டியில் புல்மோட்டை வைத்தியசாலைக்கு இட்டுச் சென்றுள்ளனர். அங்கிருந்து அவர் திருமலைப் பொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போதும் சிகிச்சையிலுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆசிரியர்கள் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியின் மீது முதலில் கல்லொன்று வீசப்பட்டுள்ளது. அக் கல் முச்சக்கர வண்டியின் முன் கண்ணாடியில் பட்டுத் தெறித்த வேளை பின்புற இருக்கையிலிருந்த குறிப்பிட்ட ஆசிரியர் தலையை வெளியே எடுத்து திரும்பிப் பார்த்துள்ளார். அக்கணத்தில் முச்சக்கர வண்டியை அண்மித்த முகம்மூடியவர்கள் அவரது தலைக்குச் சரியாகக் குறிவைத்துக் கல்லை எறிந்துள்ளனர். அக் கல் ஆசிரியரின் நெற்றிப் பகுதியைப் பதம் பார்த்துள்ளது.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி சுமார் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே வருகை தரும் ஆசிரியர்களுக்கும் கல்வி கற்கும் சில மாணவர்களுக்குமிடையே முரண்பாடுகள் இருந்து வந்ததாகவும் அதனால் சில மாணவர்கள் பாடசாலையைவிட்டுத் தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டிருந்ததாகவும் இவ் இடை நிறுத்தலின் உச்சக்கட்ட வெளிப்பாடாகவே இத் தாக்குதல் நிகழ்ந்துள்ளதாகவும் எமது நிருபர் தெரிவித்தார்.

தாக்குதலுடன் சம்பந்தப் பட்டுள்ளார்கள் என்னும் சந்தேகத்தின் அடிப்படையில் சுமார் எட்டு மாணவர்கள் காவல்த்துறையின் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.


- அனஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆம் என்னாலும் முடியும் !

## மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் குரல் கேட்கின்றதா உங்களுக்கு ?



கல்வி என்பது வாழ்க்கையில் எல்லோருக்கும் அவசியமான ஒன்று உடல் ஊனமுற்றவர்கள் சாதாரண பள்ளிகளில் சேர்ந்து கல்வி கற்க முடியும் ஆனால் மனவளர்ச்சி முழுமை அடையாதவர்களோ, கண் பார்வை தெரியாதவர்களோ, காது கேளாத மற்றும் வாய் பேசாதவர்களோ சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படிக்கமுடியாது. அவர்களுக்கென இருக்கும் சிறப்புப் பள்ளியில் தான் சேர்ந்து படிக்க முடியும் வழக்கமான பள்ளிகளில் இருப்பதை விட இப்பள்ளிகளின் பாடத்திட்டம் வேறானதாக இருக்கும். இந்தச் சமுதாயம் மன வளர்ச்சி முழுமை அடையாதவர்களை ஊனமுற்றவர்கள் என்ற பட்டியலில்தான் சேர்த்திருக்கிறது. ஊனமுற்றவர்களில் மன வளர்ச்சி முழுமை அடையாத நிலைதான் மிகவும் மோசமானதாகும்.

ஏனெனில் உடல் ஊனமுற்றவர்களை ஏதாவது ஒரு வகையில் சமுதாயம் ஏற்றுக்கொண்டு விடும் ஆனால் உடல் அமைப்பில் எந்தப்பிரச்சினையும் இல்லையென்றாலும் சிந்திக்கும் திறன் இல்லாததால் மன வளர்ச்சி முழுமை அடையாதவர்கள் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளனர். அதனால் இவர்களுக்கு சிறப்பு கவனம், கல்வி அளிக்க வேண்டியிருக்கிறது.

எமது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள நகர பாடசாலையான திருக்கோணமலை பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தில் விசேட கல்விக்கான ஒரு பிரத்தியேக வகுப்பறை உள்ளது. இங்கு பல மாணவர்கள் விசேட கல்வி பயில்கின்றனர் இப்பாடசாலையில் நடைபெறும் கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளில் இவர்களின் பங்களிப்பும் உண்டு. இம்மாணவர்கள் தற்போது ஏனைய மாணவர்களோடு சகஜமாக பழகும் சூழ்நிலை இங்கு காணப்படுகிறது. இவ்வாறானதொரு சிறப்புப் பணியை மேற்கொண்டு நடத்திய பாடசாலை முன்னால் அதிபர் திரு.ராஜநாதன் அவர்களுக்கும் தற்போதைய அதிபர் திரு.மதியழகன் அவர்களுக்கும் மலைமுரசு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

மனவளர்ச்சி முழுமை அடையாதவர்கள் உடல் ஊனமுற்றவர்கள் மீது பரிதாப்படுவதை நிறுத்திவிட்டு அவர்களுக்கு எம்மால் ஆன உதவிகளை நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டும். பக்கத்து வீடுகளில் இது போன்ற குழந்தைகள் இருந்தால் இக்குழந்தைகளுடன் நம்முடைய குழந்தைகளையும் அனுப்பி விளையாடச் செய்யவேண்டும் அப்போதுதான் பெற்றோரிடம் இருந்து கற்றுகொள்வதுடன் தன்னுடன் விளையாடும் மற்ற குழந்தைகளிடம் இருந்தும் நிறைய விடயங்களை அக்குழந்தை கற்றுக்கொள்ளும். மேலும் தான் தனிமைப்படுத்தப்படவில்லை என்ற எண்ணமும் அக்குழந்தைக்கு ஏற்படும். (பா.சுதர்சன்)



## Listen my heart - Yes I can..

### சருமம் பொலிவுற வேண்டுமா?

கோடைகாலத்திலும் சரி மழைகாலத்திலும் சரி சருமப் பாதுகாப்பு என்பது மிகவும் கடினமான ஓர் விடயமாகும். அதிலும் கோடை காலத்தில் சொல்லவே தேவையில்லை முகத்திற்கு முக்காடு போட்டு திரியவும் நாங்கள் தயார். சூரிய கதிர் ஒருபுறம் எம் மாசடைந்த சுற்றுச்சூழல் இன்னொரு புறமுமாக எம் சருமத்தை மிகவும் பாதிப்புக் குள்ளாக்குகின்றது. எம் சருமத்தைப் பாதுகாப்பதற்காக எத்தனையோ லோஷன்களை அல்லது விதம் விதமான ∴பேசியல்களை முயற்சித்தும் பயனற்றுப்போயிருக்கலாம். எனவே ஒருமுறை, இயற்கை முறையில் நம்வீட்டில் இருக்கும் கரட்டைப் பயன்படுத்தி பார்ப்போமா!

இந்த கரட் ∴பேசியல் மாஸ்க்கை எண்ணெய் பசை மற்றும் சாதாரண



சருமம் உள்ளவர்கள் செய்யலாம்.

கரட் ∴பேசியல் மாஸ்க் செய்முறை:

தேவையான பொருட்கள் - 2/3 கரட், 1 ஸ்பூன் ஒலிவ் ஒயில், 1/2 ஸ்பூன் தேன், லெமன் ஜுஸ்

தயாரிக்கும் முறை - கரட்டை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். பின்னர் அதனுடன் தேன், ஒலிவ் ஒயில், லெமன் ஜுஸ், தேவையான அளவு தண்ணீர் கலந்து மாஸ்க் செய்யவும். பிறகு அந்த கலவையை முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற விடவும். பின்னர் குளிர்ந்த நீரால் கழுவி விடவும்.

தொடர்ந்து இக் கரட் ∴பேசியலை பூசி பொலிவான சருமத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

குட்டிக் கதை

## தளபதியின் புத்தி சாதுரியம்

பேரரசன் நெப்போலியன் பெருங் களிப்பில் இருந்தான். போரில் பெற்ற மாபெரும் வெற்றி தான் அதற்குக் காரணம்.

அந்த வெற்றிக்குப் பேருதவியாக இருந்த அவனது நான்கு தளபதிளையும் அழைத்து "உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்" என்று கூறினான்.

முதல் தளபதி ஜெர்மனியைச் சேர்ந்தவன். அவன் "மன்னா! எனக்கு பாரிஸ் நகரத்தில் ஒரு வீடு கட்டிக் கொள்ள வெகுநாளாக ஆசை" என்றான். "உனக்கு பாரிஸ் நகரத்தில் பெரிய மாளிகையே கட்டித் தரச் சொல்கிறேன்" என்றான் நெப்போலியன்.

அடுத்தவன் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்தவன். தனக்கு சொந்தமாக ஒரு தங்கும் விடுதி (Hotel) நடத்த ஆசை என்று மன்னனிடம் கூறினான். மாமன்னன் நெப்போலியன் சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்வதாகக் கூறினான்.


மூன்றாம் தளபதி போலந்துக்காரன். அவன் தனக்கு திராட்சை மது செய்யும் தோட்டமும், தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டான். அதற்கும் நெப்போலியன் அதே பதில்தான் சொன்னான்.

கடைசி தளபதி ஒரு யூதன். அவன் நெப்போலியனிடம் இரண்டு வார விடுப்பு பரிசாக வேண்டும் என்று கேட்டான். அதற்கு மன்னன் நெப்போலியன் "உன் விடுப்பு நாளை முதல் தொடங்கும்" என்றான்.

அவன் பணித்தவுடன் வெளியே வந்த தளபதிகளில் முதல் மூவரும் யூதனைப் பார்த்து "சரியான முட்டாளாக இருக்கிறாயே! ஏதாவது விலை மதிப்புள்ளதாகக் கேட்காமல் விடுப்பைப் போய் கேட்டாயே?" என்று ஏளனம் செய்தார்கள். அதற்கு அவன் "நண்பர்களே! நீங்கள் கேட்டதையெல்லாம் மன்னன் ஏற்பாடு செய்து தருவதாகத்தான் கூறியிருக்கிறான். இன்னும் அவை உங்கள் கையில் கிடைக்கவில்லை. மன்னன் அவன் கொடுத்த வாக்குகளை நேரடியாகச் செயல் படுத்த அவனுக்கு நேரமிருக்கப் போவதில்லை. அவனது காரியதரிசியைத்தான் பணிக்கப் போகிறான். காரியதரிசியோ ஆயிரம் வேலை செய்பவன். அவனும் அவனுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்குத்தான் இந்த வேலைகளைக் கொடுப்பான். உங்களுக்கு அளிக்கப் பட்ட பரிசுகளுக்கான வாக்குறுதிகளின் முக்கியத்துவம் இப்படி கீழே ஆணைகள் செல்லச் செல்ல கரைந்து கொண்டே போய் மறக்கப் படும் வாய்ப்புகள் அதிகம்" என்றான்.

மற்ற தளபதிகள் "அப்படி நடந்தால் மன்னனிடம் போய் முறையிடலாம்தானே" என்றார்கள். யூதத் தளபதி சொன்னான் "நண்பர்களே. மன்னனுக்கு இன்றைக்கு இருக்கும் வெற்றிக் களிப்பு வெகுநேரம் நிலைக்காது. போரில் பெற்ற வெற்றியின் மதிப்பு நாளடைவில் மற்ற பிரச்சினைகளுக்கு இடையே ஒளியிழந்து போகும். அதோடல்லாமல் இந்தக் கணத்தின் உங்கள் துறையின் வெற்றி மட்டுமே அவன் கண் முன் நிற்கிறது. நாளை உங்கள் துறையில் ஏதாவது தவறு நடந்தால் நீங்கள் தலை நிமிர்ந்து அவன் முன் நின்று உங்கள் பரிசை உரிமையுடன் நினைவுறுத்த இயலாது. ஆனால் நான் கேட்ட பரிசோ இப்போது என் கையில்"

இதைக் கேட்ட மற்றவர்கள் பேச்சடைத்துப் போனார்கள். யூதத் தளபதி தன் விடுமுறையைத் திட்டமிடக் கிளம்பினான். அரிதான இடத்தில் உடனே கிடைக்கக் கூடிய ஒரு ரூபாய் பின்னால் கிடைக்கப் போகும் நூறு ரூபாய்களை விட மேலானது.




### மீன் கட்லட்



தேவையான பொருட்கள் : உருளைக்கிழங்கு - 500 கிராம், மீன் ரின் - 1 (பெரியது), வெங்காயம் - 100 கிராம், பச்சை மிளகாய் - 25 கிராம், மிளகு தூள் - அளவாக, உப்புத் தூள் - அளவாக, முட்டை - 2, எலுமிச்சம்பழம் - 1/2 பாதி, றஸ்க் தூள் - தேவையான அளவு, தே. எண்ணெய் - 1 போத்தல்

செய்முறை : முதலில் உருளைக்கிழங்கை அவித்து மசித்தெடுக்கவும். மீனைச் சுத்தம் செய்து மீனில் உள்ள நீரைப் பிழிந்து எடுத்த பின் மீனை உதிர்த்துக் கொள்ளவும். சிறு சிறு (குறுணலாக) துண்டுகளாக்கப்பட்ட வெங்காயம், மிளகாய், கிழங்கு இவற்றை மீன் கலவையுடன் நன்றாக பிசைந்தெடுக்கவும். பின் அதனுள் உப்பு, மிளகுத் தூள், எலுமிச்சம் புளி என்பவற்றை அளவாகச் சேர்த்துக் குழைத்து சிறு சிறு உருண்டைகளாக்கவும். அடித்த முட்டைக் கலவையுள் அவ் உருண்டைகளைத் தோய்த்து றஸ்க் தூளில் புரட்டி எடுத்துப் பொன் நிறமாகும் வரை எண்ணெயிற் பொரித்தெடுக்கவும். சுடச்சுட மீன் கட்லட் தயார்.

கைவைத்தியம் –கௌரி

### மழை நாட்களில் உடல் வலியா??




மழை நாட்களில் உடல் வலி என்பது முதிர் வயதடையும் எல்லோருக்குமே வரக் கூடியதே. அத்துடன் இளம் பராயத்தினருக்கும் ஏற்கனவே நோப்பட்ட இடங்கள் குளிர் பரவும் போது இளகுவதால் வலி உருவாகலாம். இவ்வலிகளிலிருந்து நிவாரணம் பெற உடனடிக் களிம்புகள் ஆயிரம் விற்கப்படுகின்றன. என்றாலும் நிரந்தர நிவாரணம் வேண்டுமா? இதோ....

தேவையானவை : நொச்சியிலை, ஆடாதோடை, வாதமடக்கி, முழு வெள்ளை உள்ளி (முழுப்பூண்டு), உப்பு 1 மேசைக்கரண்டி

செய்முறை:

அனைத்தையும் ஒன்றாக்கி இடிக்கவும். பசையாக இடிக்காமல் சம்பல் பருவம் வரும்வரை இடித்து, அதனை வழித்து துணியோன்றில் பொட்டணி கட்டிக் கொள்ளுங்கள். பின் அப் பொட்டணியை நீத்துப் பெட்டியிலிட்டு அவியுங்கள். அளவான சூட்டுடன் வலியுள்ள இடங்களில் காலையும் மாலையும் இரண்டு வேளை மூன்று நாட்களுக்கு ஒத்தனம் கொடுங்கள். வலி......... எங்கே போய் விட்டது.... ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### வீடு திரும்பினர் சட்டவிரோத குடியேற்ற வாசிகள்

கடந்த 1.12.2012 அன்று 50பேர் கொண்ட சட்ட விரோத அவுஸ்திரேலிய பயணிகள் அங்கிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பபட்டுள்ளனர் . இந்தக் குழுவில் வெவ்வேறுப்பட்ட படகுகளில் பயணித்த வயது வந்த தனி நபர்கள் அடங்கி உள்ளதாக அவுஸ்திரேலிய அரசின் குடிவரவு குடியகல்வு திணைக்கள அமைச்சர் கிரீஸ் போவன் தெரிவித்தார் .மேலும் தெரிவித்த அவர் இதுவரை 107 இலங்கையர் சுய விருபத்தின் பேரில் வீடு திரும்பி உள்ளதாகவும் .நாடு திரும்ப விரும்புவர்கள் எதிர் வரும் காலங்களில் விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பியனுப்பபடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார் .

### பாலஸ்தீனத்தை ஆதரிக்கும் எதிர்க்கட்சி

பாலஸ்தீனம் தொடர்பான எந்த சாவால்களையும் எதிர் கொள்ள தாயராக இருப்பதாக் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச கடந்த புதன் கிழமை BCIS இல் இடம் பெற்ற பாலஸ்தீன ஆதரவு கூட்டத்தில் தெரிவித்தார். அதுமட்டும் அல்லாது கடந்த புதன்கிழமை பாலஸ்தினதுக்குஆதரவுதெரிவித்து ஐக்கிய நாடுகள் சபை இலங்கைத் தலைமையகத்துக்கு முன்னர் மக்கள் போராட்ட இயக்கத்தால் கண்டன பேரணி ஒழுங்கு செய்யப்பட்டு வெற்றிகரமாக இடம்பெற்றது .

### மதர் ஸ்ரீலங்காவின் முதலாவது செயற்றிட்டம்

மதர் ஸ்ரீலங்கா நம்பிக்கை நிதியம் தனது முதலாவது செயல்திட்டமான run for lanka ரன் பொர் லங்காவை அண்மையில் அலரி மாளிகையில் தொடக்கி வைத்தது .இதில் மேல் மாகாணத்தை சேர்ந்த 150 அதிபர்கள் ஆசிரியர்களும் 2000 மாணவர்களும் கலந்து கொண்டனர். எதிர்வரும் காலங்களில் இச்செயல் திட்டத்தில் மாகாண ரீதியாக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயிற்சிப் பட்டறைகள் ஒழுங்கு செய்யப்படவிருக்கிறது .

### மேலும் ஆறு வருடங்கள் தலைவரானார் ரணில்

ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 54வது பொதுக்கூட்டத்தில் மேலும் ஆறு வருடங்களுக்குத் தலைவராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் ரணில் விக்ரமசிங்கா.

பெருமளவு அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ரணிலின் தலைமைத்துவ நீடிப்பை சஜித் பிரேமதாசா, கருஜெயசூரியா, தயாசிறி ஜெயசேகர மற்றும் புத்திக பத்திரண ஆகியோர் எதிர்த்திருந்தனர். அதனைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் 4978 வாக்குகளை ஆதரவாகப் பெற்ற ரணில் தனது பதிவிக்காலத்தை நீடித்தார். எதிராக 337 வாக்குகளே வீழ்ந்தன.

அழைக்கப்படாத எவருமே உள்நுழையாதபடி ஸ்ரீகோத்தா பெரும் பாதுகாப்பில் அன்றைய நாள் இருந்துள்ளது.

### பிரதம நீதியரசரின் வங்கிப் பரிமாற்றங்கள் கேள்விக்குட்படுத்தக் கூடியவையே!

ஒவ்வொரு வருடமும் அவ்வருடத்தின் டிசம்பர் மாதத்திலும் அடுத்து வரும் தனது வங்கிமீதிகளை பூச்சியமாக மாற்றத்தக்கவாறு பிரதம நீதியரசர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் கேள்விக்குட்படுத்தக் கூடியவையே என நிதி விற்பன்னர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கேற்றாற் போலவே குறுகிய கால அறிவித்தலுடன் நீதியரசர் வைப்பிடலையும் மீள் எடுத்தல்களையும் செய்துள்ளார் என அவர்கள் கூறியுள்ளனர்.

### நீண்ட நாட்கள் இலங்கையில் தங்க மருத்துவப் பரிசோதனை அறிக்கை அவசியம்

இருப்பிட மற்றும் நீண்ட நாடகள் தங்குவதற்கான விசா அனுமதிக்கு மருத்துவ அறிக்கை அவசியம் என அரசு தெரிவித்துள்ளது

## The Sunday Leader

### காமன் வெல்த் தலைவர்களின் கூட்டத்தைப் புறக்கணித்தது கனடா

கனேடிய பிரதம மந்திரி ஸ்டீபன் ஹாபர் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளார். இலங்கையில் மனித உரிமை நிலமையில் விருத்தி ஏற்படாத நிலையில் இக்கூட்டத்தில் கலந்து கொள்வது உசிதமற்றது என கனடா நினைப்பதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கிறிஸ்டீன் றொய் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை தற்போது வரை போரினால் மரணித்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தொடர்பில் தொடர்ந்தும் பிழைவிடுகிறது என தெரிவித்தார். அத்துடன் நீதித்துறையின் சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கும் இலங்கை நடவடிக்கைகள் கவலை தருவதாக அப்பேச்சாளர் தெரிவித்தார். அத்துடன் மனித உரிமை விடயத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவு முன்னேற்றம் காணப்படாதவிடத்து தான் கொமன் வெல்த் கூட்டத்தொடரில் பங்கேற்பது உசிதமற்றது என்று பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் ஹாபர் தான் இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளப்போவதில்லை என்ற விடயத்தை தெரிவித்திருந்தார். அத்துடன் ஒரு வருட காலப்பகுதியை ஓர் அவதானிப்பு காலமாக அவர் வைத்திருந்த போதும் அக்காலப்பகுதியில் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார். கனேடிய வெளிவிவகார அமைச்சர் அண்மையில் வெளியிட்ட கருத்தொன்றில் இலங்கை தம் மக்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருந்தார். வெளிவிவகாரப் பேச்சாளர் மேலும் தகவல் தருகையில் பிரதம நீதியரசர் தொடர்பான விடயத்தினை கனடா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்றும் கூறினார்.

### இறுதியுத்த பிரதேசத்துக்குள் நுழைந்தது – ஐ.நா சபையின் குழு

வருகைதந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர் குழு ஒன்று முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் மீளமர்ந்துள்ள மக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். சிரேஷ்ட அரசியல் விவகார ஐ. நா அலுவலர் விட்டோக்கு தென் முள்ளிவாய்க்கால் மக்களின் வாழ்நிலை தொடர்பாக அம்மக்களுடன் பேசினார். அம்மக்கள் அவரிடம் தாம் வாழ்வதற்காக வழங்கப்பட்டுள்ள வசதிகள் போதாதுள்ளதை சுட்டிக் காட்டியுள்ளனர். இது தொடர்பாக உரிய அலுவலகர்களுக்கு தெரியப்படுத்துவதாக அவர் மக்களுக்கு தெரிவித்தார்.

## The Sunday Times:

### புதிய கிராமப் பெயரை நீக்குமாறு மீயுயர் நீதிமன்றம் உத்தரவு

வலிகாமம் மேற்கு பிரதே சபையினால் சிவன் கோவிலடி என்ற கிராமத்தின் பெயரை சிந்துபுரம் என்று மாற்ற முயற்சித்த நடவடிக்கையை மீயுயர் நீதிமன்றம் தடுத்து நிறுத்தியுள்ளது. சிந்துபுரம் எனும் பெயர் ஒரு சாதியைக் குறிப்பதால் அக்கிராமத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை உருவாகுவதாக முறைப்பாட்டாளர்கள் மேன்முறையீடு செய்தனர். சிந்துபுரம் என்பது இந்திய சாதியான சிந்து நாட்டார் என்பதைக் குறிக்கிறது. அத்துடன் சிந்து என்பது ஒரு புனிதமான பெயரல்ல என்பதும் முறைப்பாட்டாளர்களின் குறிப்பாக இருந்தது. அத்துடன் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் 2005ம் ஆண்டில் சிவன்கோவிலடி எனும் பெயர் சிந்துபுரம் என மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 57வது ஒழுங்கையின் பெயர் மாற்றத்தில் இழுபறிகள்

வெள்ளவத்தையில் உள்ள 57ம் இலக்க தமிழ் சங்கத்துக்கு செல்லும் பாதையை "தமிழ்ச்சங்கப் பாதை" என மாற்றும் நடவடிக்கை இழுபறிக்குள்ளாகியுள்ளது. மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தன்னால் முன்னொரு காலத்தில் வழங்கப்பட்ட இப்பெயர்மாற்ற அறிவித்தலை மீளப்பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளார். நவம்பர் மாதம் 25ம் திகதி இப்பாதையின் பெயரை மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது அவ்விழா பிரபாகரின் பிறந்ததினத்துடன் தொடர்புறுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

## The Sunday Times:

### விற்க வருகிறது பாராளுமன்ற உறுப்பினர் வாகன அனுமதிப்பத்திரம்.

இலங்கையின் திறைசேரி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது விசேட வாகன அனுமதிப்பத்திரங்களை திறந்த சந்தையில் விற்கலாம் என வழங்கிய அனுமதியினை அடுத்து திறந்த சந்தைக்கு வருகின்றது அவ் அனுமதிப் பத்திரங்கள். 6.5 மில்லியன் ரூபா அல்லது 50,000 அமெரிக்க டொலர்கள் வரை பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்யும் வலுக் கொண்ட அனுமதிப் பத்திரங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டிருந்தனர். அவற்றை தற்போது உள்ளூர் சந்தையில் ரூபா 20 மில்லியனுக்கு விற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அரசு கடந்த மாதம் அரசாங்க திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்துள்ள வாகன அனுமதிப் பத்திரங்களை விற்கும் அனுமதியை வழங்கியிருந்தது. இதனால் சுமார் 15,000 அரச அலுவலகர்கள் நன்மை அடைந்துள்ளனர். அந்நன்மையை தாமும் அனுபவிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆசைப்பட்டதால் அதனை அனுமதிக்குமாறு விண்ணப்பித்ததாக பாராளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா விஜேசேன தெரிவித்திருந்தார். இவ் அனுமதிக்கு முன் வாகனஅனுமதிப் பத்திரங்களின் விலை அதிகரித்திருந்ததாகவும் தற்போது வாகன அனுமதிப்பத்திரங்களின் விலை குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஈராக்கிலிருந்து மசகு எண்ணெய்

ஈரானுக்கு நிகரான மசகு எண்ணெயினை தற்போது ஈராக்கிலிருந்து இறக்குமதி செய்ய முடியுமென இலங்கை அரசு தெரிவிக்கின்றது. இதனை நிறைவேற்றுவதற்காக சிரேஷ்ட அலுவலர் ஒருவரை அரசு நியமித்துள்ளது. வட ஈராக்கின் மசகெண்ணெய் இருப்பானது ஈரானிய மசகெண்ணெய்க்கு ஒப்பானதாயிருப்பதால் அதனை கபுகஸ்கந்தையில் பிரிப்புக்குட்படுத்த முடியுமெனவும் இதனால் எண்ணெய்ச் செலவு குறையுமெனவும் மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். எண்ணெய் தவிர இவ்விரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவைப் பேணிக்கொள்ளவும், இலங்கையிலிருந்து தைத்த ஆடைகளையும் தேயிலையையும் ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் ஈராக்கில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் · பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை பல தடவை ஈரானுக்கு எதிராக இலங்கைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு கெஞ்சியிருந்த போதும் அக்கெஞ்சல்கள் பயனற்றுப் போய்விட்டன.

### உயிருடன் தாண்டனர் இருவர்.

பத்தரமுல்லையில் நீர்த்திட்டமொன்றிற்காக பாரிய குழியொன்றை வெட்டும் பணியில் ஈடுபட்ட இருவர் அக்குழி உடைந்ததால் உயிருடன் புதைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு புதைந்த மேலும் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புள்டோசர் ஒன்றின் உதவியுடன் குழியினை வெட்டும் நடவடிக்கையின் போதே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

### தகவல்களைக் கசிய விட்டதால் தூக்கப்பட்டார் சுங்க திணைக்கள பணிப்பாளர் .

திறைசேரிச் செயலாளருக்கு பல மில்லியன் ரூபா ஊழல் உடன் தொடர்பிருப்பதாக எழுந்த சந்தேகத்திற்கு காரணமான சுங்கத் தகவல்களை பத்திரிகைக்கு கசிய விட்டார் எனும் சந்தேகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் நெவில் குணவர்த்தன அப்பதவியில் இருந்து தூக்கப்பட்டு மீண்டும் திறைசேரிக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்திற்கு ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜெகத் விஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார். வரி மோசடி தொடர்பான விசாரணையொன்றை நிறுத்துமாறு திறைசேரி உத்தரவிட்ட தகவல் பத்திரிகைகளுக்கு கசிந்தது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட குற்றப்புலனாய்வுத் துறையின் விசாரணைகளில் சுங்கப் பணிப்பாளரே அத்தகவல்களைக் கசிய விட்டதாக தெரியவந்தமையை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## கோணேஸ்வரா இந்துவின் 13 வயதின் அணி வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் திருகோணமலை இராம கிருஸ்ண சங்கம் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி வித்தியாலோக ராஜகீய வித்தியாலயத்தை கடந்தவாரம் 8 இலக்குகளால் வெற்றி கொண்டது.

சனிக்கிழமை 01.12.2012 காலை இப்போட்டி இந்துக் கல்லூரி மைதானததில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜகீய வித்தியாலோக அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட விரும்பினர். இதன்படி முதல் இன்னிங்சில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றனர் தரங்கா, டில்சான் இருவரும் தலா 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்த வீச்சில் இந்துக் கல்லூரி உதவி தலைவர் ஹரிகீர்த்தனன் 7 பந்துப்பரிமாற்றங்களில் 5 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுக்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி அணியினர் 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றனர். அணித்தலைவர் வி.ஆனந்தபிரகாஸ் 51 , யு.மதுகரன் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பிரபாத் 5 பந்துப்பரிமாற்றங்களை வீசி 22 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களைப் பெற்றார்.

இரண்டாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய ராஜகீய வித்தியாலோக அணியினர் 18 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஹரிகீர்த்தனன் 8 பந்துப் பரிமாற்றங்களில் 12 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைப் பெற்றார்.

38 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் மைதானம் புகுந்த இந்துக் கல்லூரி அணியினர் 2 விக்கட் இழப்பிற்கு 39 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றி பெற்றனர். இந்துக் கல்லூரி உதவி அணித் தலைவர் ஹரிகீர்த்தனனின் அபாரமான பந்து வீச்சே இவ்வெற்றிக்கு காரணமாகும். இவர் இரண்டு இன்னிங்சிலும் 17 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 11 இலக்குகளைக் கொய்திருந்தார்.

(சுஜன்)



## சமநிலையில் முடிவுற்றது விக்னேஸ்வரா எதிர் இராஜகீய துடுப்புமட்டைப் போட்டி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நாடளாவிய ரீதியில் 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டிகளை நடத்தி வருகின்றது. திருகோணமலை மாவட்டத்துக்கான லீக் முறையிலான போட்டியில் 02.12.2012ல் பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கும் ராஜகீய வித்தியாலோக பாடசாலைக்கும் இடையே நடைபெற்றது. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய ராஜகீய பாடசாலை 127 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு களம் இறங்கிய விக்நேஸ்வரா மகா வித்தியாலய அணியினர் 96 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் 24 ஓவர்கள் விளையாடிய ராஜகீய பாடசாலை 5 விக்கட் இழப்பிற்கு 60 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தி விக்நேஸ்வரா மகா வித்தியாலய அணியினரை துடுப்பெடுத்தாட அழைத்தனர்.

பதிலுக்கு 91 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களம் புகுந்த விக்நேஸ்வரா மகா வித்தியாலயம் ஆட்ட நேரம் முடியும் வரை ஒரு விக்கட் இழப்பிற்கு 60 ஓட்டங்களைப் பெற்றனர். இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

(கஜன்)

## புதிய பொழிலில் பெருந்தெரு விக்கினேஸ்வரா

பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் முகப்புக் கோபுரமும் முன் மதில் அலங்கார வேலைகளும் முடிவடைந்த நிலையில் அப் பாடசாலை இவ்வாறு கம்பீரமாக காட்சி தருகின்றது இவ் வேலைகள் அப் பாடசாலை அதிபர் திரு . மதியழகன் அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

(படங்கள் முகப்புத்தகம்)






## உயிர் தேசிய திப்புளோமா மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான பொதுக் கூட்டம்

எதிர்வரும் 09.12.2012 ஞாயிற்றுக் கிழமை அன்று புனித சேவியர் வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு கூட்டமொன்று நடைபெற வுள்ளது. இக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர். உயர் தேசிய திப்புளோமாவின் நியமன நிலைமைகள் தொடர்பாகவும் அக் கல்வி நெறியின் எதிர்காலம் தொடர்பாகவும் கலந்துரையாட வுள்ளதால் தயவு செய்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றனர்.

## எரிந்தன உந்துருளிகள்

கடந்த சனிக்கிழமை 01.02.2012 அன்று விகாரை வீதியில் வீடொன்றில் இனம் தெரியாத சிலர் வீட்டில் நின்ற மூன்று உந்துருளிகளுக்கு தீ வைத்து விட்டு மறைந்துள்ளனர். குறித்த வீட்டின் மதில் பாய்ந்து வளவிற்குள் நின்ற அப்பாச்சி, ஸ்கூட்டி மற்றும் சாம் ஆகிய உந்துருளிகளை தீக்கிரையாக்கிய சூத்திரதாரிகள் பற்றி தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை இது தொடர்பான விசாரணைகளில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

(பிரஷன்)



மலைமுரசு பத்திரிகையின் அலுவலக வினியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

தயாராகின்றது திருமலைக்

### "கலைஞர்களின் கையேடு"

திருக்கோணமலை நகர லியோ கழகத்தினர் மலைமுரசின் அனுசரணையுடன் திருமலைக் கலைஞர்களின் விபரங்களைத் திரட்டிக் கையேடாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கையேட்டின் முதற் பதிப்பில் இயலுமான அளவு கலைஞர்களின் தகவல்களைக் திரட்டிக்கொள்ள நகர லியோ கழகத்தினர் முயன்று வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக கலைஞர்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் வருமாறு :

லியோ. பா. சுதர்சன், செயலாளர்

- 078 0584079 அல்லது 077 5397744

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர். செல்வி.குருகுலசிங்கம் ஸ்ரீவதனி

தாய்மடி 1978-03-30

இறைவனடி 3011.11.34

## பணிப்புறக்கணிப்பில் வெள்ளுடைத் தாதியர்




கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை பொது வைத்தியசாலை தாதியர்கள் ஒரு மணி நேர அடையாள பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் ஆபத்துக் கொடுப்பனவுகளை கூட்டவும், தங்களது வேலை நாட்களை 5 நாட்களாக குறைக்கவும் தாதியர் பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்துதல், பழைய நிர்வாக குறிப்புக்கு அமைய பதவி உயர்வை வழங்கவும் கோரி இப் புறக்கணிப்பு இடம் பெற்றது.

இதற்கான சரியான தீர்வுகள் கிடைக்காது போனால் எதிர் வரும் நாட்களிலும் பணி பகிஸ்கரிப்பை தொடர உள்ளதாக தாதியர்கள் தெரிவித்து உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org